# சிக்கன வாழ்வு

(சிக்கனம், மன நிறைவு மற்றும் வீண் விரயம் சம்பந்தமானது)

بِسْمِ اللهِ الرَّحْمنِ الرَّحِيمِ

كُلُوا وَاشْرَبُوا وَلاَ تُسْرِفُوا [i]

இந்த வசனம் சிக்கன வாழ்விற்கான திட்டவட்டமான கட்டளைகளையும், வீண் விரயத்திற்கெதிரான தெளிவான தடைகளையும் தன்னகத்தே பொதியப் பெற்று மிக முக்கியமானதொரு வாழ்க்கைத் தத்துவத்தைக் கற்றுத் தருகின்றது. இதில் ஏழு அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**முதலாவது அம்சம்**

மகா கருணையாளனான படைப்பாளன் மனித குலத்திற்கு அருளிய அருட் கொடைகளுக்குப் பகரமாக அவனிடமிருந்து நன்றியை எதிர்பார்க்கின்றான். வீண்விரயமானது, நன்றிக்கு நேர் முரணானதும், அருட்கொடைகளை அலட்சியம் செய்வதுமான ஒரு செயலாகும். ஆம், சிக்கன வாழ்வானது ஒரு வகை உள்ளார்ந்த நன்றியும் அருட்கொடைகளில் பொதிந்திருக்கும் இறை கருணைக்குச் செலுத்தும் கண்ணியமுமாகும். அதேவேளை, பரக்கத்துக்கான காரணியாகவும், உடலுக்கு ஔடதம் போன்றதோர் ஆரோக்கியக் காரணியாகவும், உள ரீதியான யாசகத்தினால் ஏற்படும் அவமானத்தை விட்டும் பாதுகாப்பளிக்கும் ஒரு கண்ணியக் காரணியாகவும் இருக்கின்றது. மேலும், அருட்கொடைகளோடு ஒட்டியிருக்கும் சுவையையும், இன்பத்தையும் குறிப்பாக, அருட்கொடைகளில் பொதிந்திருக்கும் மறைவான இன்பங்களையும் அனுபவிக்கச் செய்யும் வலுவானதொரு காரணியாகவும் திகழ்கின்றது. வீண்விரயத்தைப் பொருத்தவரை, அது மேற் கூறப்பட்ட உண்மைகளுக்கு நேர் முரணானது என்பதால், அதன் விளைவுகள் பாரதூரமானவையாகக் காணப்படுகின்றன.

**இரண்டாவது அம்சம்**

சர்வஞானமிக்க படைப்பாளன், மனித உடலைப் பரிபூரணத்துவமிக்க ஓர் அரண்மனை போன்று அல்லது மிகவும் நேர்த்தி மிக்கதொரு நகரம் போன்று படைத்துள்ளான். நாவிலுள்ள சுவையுணர்வானது ஒரு வாயிற் காவலனாகும். இந்த வாயிற்காவலன் வாய்க்கு வரும் பண்டம் சம்பந்தமான தகவல்களைத் தொலைத்தொடர்பு சாதனங்களின் இணைப்புக் கம்பிகள் போன்று செயற்படும் நரம்புநாளங்களுக்கு (நரம்புநாளங்கள் சுவையுணர்விற்கும் உடலின் மத்தியஸ்தமான இரைப்பைக்கும் இடையிலான தொடர்பாடல் சாதனமாகும்) வழங்கும் உடம்புக்கும் இரைப்பைக்கும் அவசியமற்றது எனில், தடை உத்தரவு பிறப்பித்து வெளியேற்றி விடுவான். சிலவேளை அவ்வுணவினால் உடலிற்கு எவ்வித நன்மையும் இல்லை என்பதுடன், தீங்கு விளைவிக்கக் கூடியதும் கசப்பானதும் எனில், உடனடியாக அதனை வெளியேற்றி முகத்தில் காறித்துப்பிவிடுவான். ஆம், வாயிலுள்ள சுவை உணர்வானது வெறுமனே ஒரு வாயிற் காவலனாகும். இரைப்பையானது உடலின் நிர்வாக விடயத்தில் அரசனாகும். அந்த அரண்மனைக்கு அதன் அரசனுக்காக வரும் அன்பளிப்புக்களின் பெறுமதி நூறு தங்கம் எனில், வாயிற் காவலனுக்கான அன்பளிப்பு என்ற வகையில் அதிக பட்சம் ஐந்து தங்கம் போதுமானதாகும். அதை விட அதிகரிக்க முடியாது. ஆக, வாயிற் காவலன் அகம்பாவம் கொண்டு, தலை மேல் ஏறிக் கொண்டு, தனது பணியை மறந்து விட்டு அதிகம் அன்பளிப்புக் கொடுக்கும் கலகக்காரர்களை அரண்மனைக்குள் அனுமதிக்காதிருக்கட்டும். ஆம், இந்த உண்மையின் அடிப்படையில் இரண்டு கவளம் உணவை எடுத்துக் கொள்வோம். ஒன்று பால் முட்டை போன்ற ஊட்டம்

---

[i] அல்அ.்.ரா.்.ப், 31

நிறைந்தவற்றின் பெறுமதியானது நான்கு காசாகவும், மற்றது மிக உயர்தரமான இனிப்புப் பண்டத்தின் பெறுமதியானது நாற்பது காசாகவும் இருப்பின், இந்த இரு கவளங்களும் வாயினுள் நுழைய முன்னர் தோற்றத்தளவில் பாரிய வேறுபாடுகள் கிடையாது; ஒத்தவையாகும். தொண்டைக் குழியைத் தாண்டிய பிறகு அவை உடலைப் போசிப்பதிலும் எந்த வேறுபாடும் கிடையாது. சிலவேளை, நான்கு காசு பெறுமதியான முட்டை மிகவும் சிறப்பாகப் போசிக்கும். வெறுமனே நாவிலிருக்கும் சுவை உணர்வைத் தடவிக் கொடுக்கும் விடயத்தில் அரை நிமிட வேறுபாடு உள்ளது. அரை நிமிட வேறுபாட்டுக்காக நாலு காசிலிருந்து நாற்பதுக்குத் தாவுவது எப்படிப்பட்ட அர்த்தமற்ற, இழப்பு மிகு வீண்விரயம் என்பதை ஒப்பிட்டுக் கொள்ளுங்கள். இவ்வாறு, அரண்மனையில் அரசனுக்கு வரும் அன்பளிப்பு நாலு காசு பெறுமதியானதாக இருக்கும் போது, வாயிற் காவலனுக்கு ஒன்பது மடங்கு அதிகமாக அன்பளிப்புக் கொடுப்பது வாயிற்காவலனைத் தலைக்கு மேல் ஏற வைக்கும். தானே அரசன் என்ற தோரணையில் அவன் செயற்பட ஆரம்பிப்பான்; அதிக அன்பளிப்பும், சுவையும் கொடுப்பவர்களை உள் நுழைய அனுமதிப்பான்; கலகம் ஆரம்பமாகும்; நெருப்பு மூட்டப்படும். இறுதியில் மனிதன் வைத்தியரின் காலில் விழுந்து “வெப்பத்தைத் தணித்து விடுங்கள், நெருப்பை அணைத்து விடுங்கள்” என்று தலைகுனிய நிர்ப்பந்திக்கப் படுவான்.

ஆம், சிக்கனமும், மன நிறைவும் இறை ஞானத்தை அடியொட்டிய செயற்பாடுகளாகும். அவ்விரு பண்புகளும் சுவை உணர்வை வாயிற் காவலன் என்ற அந்தஸ்தில் வைத்து அதற்குரிய அன்பளிப்பைக் கொடுக்கும். மாறாக வீண்விரயமானது, இறை ஞானத்துக்குப் புறம்பான செயற்பாடு என்பதால் விரைவாகவே அதற்கான தண்டனையைப் பெற்றுக் கொள்ளும்; வயிற்றைக் குழப்பி உண்மையான பசியுணர்வை மழுங்கடிக்கச் செய்துவிடும்; வகை வகையான உணவுகளுக்கு முன்னால் வரும் செயற்கையான போலிப் பசியுணர்வால் உண்ணத் தூண்டும்; சமிபாடின்மைக்குக் காரணமாக அமையும்; இறுதியில் மனிதனை நோயாளியாக்கி விடும்.

**மூன்றாவது அம்சம்**

இரண்டாவது அம்சத்தில் சுவை உணர்வு ஒரு வாயிற் காவலனாகும் என்றோம். ஆம்! பொடுபோக்குக்காரர்களுக்கும், ஆன்மீகப் பக்குவமடையாதவர்களுக்கும், இறைவனுக்கு நன்றியுடையவர்களாக வாழும் விடயத்தில் ஏற்றமடையாதவர்களுக்கும் அது ஒரு வாயிற் காவலனுடைய நிலையை ஒத்ததேயாகும். அதன் சுவையுணர்வைப் போஷிப்பதற்காக வீண்விரயம் செய்யாதிருப்பதும் செலவை ஒன்றிலிருந்து பத்தாக அதிகரிக்காதிருப்பதும் அவசியமானதாகும். ஆனால், உண்மையிலேயே உள்ளத்தில் இறை நன்றியை சுமப்பவர்களதும், சத்தியவான்களதும், ஆன்மீகவாதிகளதும் சுவை உணர்வானது -ரிஸாலே-இ நூர் தொகுப்பின் ஆறாவது வார்த்தையிலுள்ள மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று- இறை கருணையின் வெளிப்பாடான வகை வகையான ஆகாரங்களைத் தயாரிக்கும் சமையல் கூடங்களுக்கான ஓர் உயர்நிலைக் கண்காணிப்பாளர் அல்லது பரிசோதகர் என்ற அந்தஸ்தை அடைகின்றது. இந்தச் சுவையுணர்வானது, தன்னகத்தே கொண்டுள்ள உணவுப் பண்டங்கள் எண்ணிக்கையளவு ஏராளமான அளவீடுகளின் உதவியால் வகை வகையான இறை அருட்கொடைகளை இனங்கண்டு, எடைபோட்டு, ஓர் ஆத்ம நன்றியுணர்வுடன் கூடவே உடலுக்கும் இரைப்பைக்கும் தகவல் கொடுக்கின்றது. ஆம்! இப்படியான சுவை உணர்வு வெறுமனே பௌதீக உடலைச் சார்ந்ததல்ல. மாறாக, அது இதயம், ஆன்மா, அறிவு என்பவற்றையும் சார்ந்துள்ள காரணத்தினால் இரைப்பையை விட அந்தஸ்தில் உயர்ந்ததாகும்.

வீண்விரயம் செய்யாதிருக்கும் நிபந்தனையுடன், தனியாக இறைவனுக்கு நன்றி செலுத்தும் கடமையை அடிப்படையாக வைத்து, வகை வகையான இறை அருட்கொடைகளை இனங்கண்டு அறிந்து கொள்வதை அடியொட்டி, இழிவுக்கும், யாசகத்துக்கும் உங்களை

இட்டுச் செல்லாதிருக்குமெனில் அனுமதிக்கப்பட்ட சுவைகளை நீங்கள் பின் தொடரலாம். மேலும், சுவை உணர்வைச் சுமந்திருக்கும் நாவை இறைவனுக்கான நன்றியில் திளைத்திருக்கச் செய்வதற்காகவும் அறுசுவை உணவுகளைத் தெரிவு செய்யலாம். இந்த உண்மையை கௌஸுல் அ.்.லம் ஷெய்க் அப்துல் காதிர் ஜெய்லானி அவர்களது வாழ்வில் நிகழ்ந்த கராமத் பொருந்திய ஒரு சம்பவம் நமக்குத் தெளிவுபடுத்தும்.

ஒரு சமயம் அன்னாரிடம் கிராமப் புறத்தைச் சேர்ந்த வயது முதிர்ந்த ஒரு பெண்ணின் ஒரே மகன் ஆன்மீகப் பயிற்சி பெற்று வந்தான். மதிப்புக்குரிய ஆனால், சற்று முரட்டு சுபாவமுள்ள அந்தப் பெண் ஒரு முறை தனது புதல்வனைச் சந்திக்கச் சென்ற வேளை, அவன் தனது அறைக்குள் காய்ந்து கருகிப் போன ஒரு ரொட்டித் துண்டை சாப்பிட்டுக் கொண்டிருந்தான். குறை உணவால் மெலிந்து போன அவனைக் கண்டு தாயுள்ளம் வருந்தியது. பின்னர் அதுபற்றி முறையிடுவதற்காக ஷெய்க் இடம் சென்ற போது, அங்கே கௌஸுல் அ.்.லம் அவர்கள் பொறித்த கோழியொன்றைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அதனைக் கண்ட அவள் தனது முரட்டு சுபாவம் காரணமாக, ''ஷெய்க் அவர்களே! அங்கே எனது மகன் பசியால் செத்துக் கொண்டிருக்கின்றான். நீங்களோ இங்கே பொறித்த கோழி சாப்பிட்டுக் கொண்டிருக்கின்றீர்கள்'' என்றாள். பதிலுக்கு கௌஸுல் அ.்.லம் அவர்கள் கோழியைப் பார்த்து ''கும் பி'இதினில்லாஹ் - அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு எழுந்திரு'' என்று கூறினார். உடனே சமைக்கப்பட்ட அந்தக் கோழியின் முட்கள் ஒன்றோடொன்றிணைந்து, முழுக் கோழியாக உணவுத் தட்டிலிருந்து குதித்த சம்பவம் உண்மைக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான அறிவிப்பாளர்களினூடாக, அற்புத கராமத்துக்கள் விடயத்தில் உலகளவில் பிரசித்தம் பெற்ற ஷெய்க் கௌஸுல் அ.்.லம் அவர்களது ஒரு கராமத்தாக சந்தேகத்திற்கிடமின்றி வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பிறகு ஷெய்க் அவர்கள் அந்தப் பெண்ணிடம் இவ்வாறு கூறினார்: ''உனது மகனும் எப்போது இந்நிலையை அடைகின்றானோ, அப்போது அவனும் கோழி சாப்பிடட்டும்.''[ii]

ஆம். ஷெய்க் அவர்களது இந்தக் கட்டளையின் அர்த்தமானது 'எப்போது உனது மகனின் ஆன்மா உடம்பின் மீதும், மனசாட்சி ந.்.ப்ஸின் மீதும், அறிவு வயிற்றின் மீதும் ஆதிக்கம் செலுத்துகின்றதோ, மேலும் அறுசுவைகளை, எப்போது இறை நன்றியாளனாக ஆகுவதற்காக வேண்டுகின்றானோ, அப்போது சுவை மிக்க உணவுகளைச் சாப்பிடலாம்'' என்பதாகும்.

**நான்காவது அம்சம்**

''சிக்கனமாக வாழ்பவர், வாழ்வாதார விடயத்தில் குடும்பக் கஷ்டத்தை அனுபவிக்க மாட்டார்'' என்ற அர்த்தத்தில் வரும் [iii] لَا يَعُولُ مَنِ اقْتَصَدَ என்ற ஹதீஸின் அடிப்படையில் சிக்கனம் பேணுபவன் வாழ்வாதாரங்கள் சம்பந்தமான விடயத்தில் குடும்பக் கஷ்டத்தையும், அவதியையும் அடைவது அரிதானதாகவே இருக்கும். ஆம், சிக்கனமானது பரக்கத்தை ஏற்படுத்தும் வலுவான ஒரு காரணியாகவும், அழகிய வாழ்வாதாரத்திற்கான ஒரு நிபந்தனையாகவும் இருக்கின்றது என்பதற்கான ஆதாரங்கள் எண்ணி முடிக்க இயலாதவை. உதாரணமாக, இங்கு எனக்கு உதவிக்காக நிற்கும் நெருக்கமான தோழர்களின் சாட்சியுடன், எனது சொந்த வாழ்வில் கண்ட ஒரு விடயத்தை கூறுகிறேன். சிக்கனத்தின்

---

[ii] அல்யாபிஈ (ரழி) கூறுகிறார்: அப்துல் காதிர் ஜெய்லானி (ரஹ்) வரை சென்றடையும் ஸஹீஹான தொடர் அறிவிப்பாளர் வரிசையின்படி: அவரிடம் இருந்த இளைஞனின் தாய் ஒரு முறை அவரிடம் வரும்போது அவர் கோழி இறைச்சி சாப்பிட்டுக் கொண்டிருந்தார். தனது மகனுக்கு மதிப்பற்ற உணவைக் கொடுத்து விட்டு ஷெய்க் கோழி இறைச்சி சாப்பிடுவதை அத்தாய் நிராகரித்தார். அப்போது ஷெய்க் அவர்கள் அத்தாயிடம்: "எப்போது உனது மகன் இது போன்ற கோழியைப் பார்த்து அல்லாஹ்வின் அனுமதிப்படி எழுந்திரு என்று கூற அது எழுந்து இறக்கைகள் பெற்று பறந்து விடுமோ அப்போது உனது மகனுக்கும் கோழி சாப்பிட அனுமதியுண்டு" எனப் பதிலளித்தார். (இமாம் இப்னு ஹஜர் (ரஹ்)அவர்களின் பதாவா அல்ஹதீஸிய்யா, பக்கம்:80) - மொழிபெயர்ப்பாளர்

[iii] அஹ்மத் பின் ஹன்பல்,1/147 ; முஸ்னத்,1:447

காரணமாக, ஆகாரத்தில் சிலவேளைகளில் ஒன்றுக்குப் பத்து மடங்கு அபிவிருத்தியைக் கண்டு கொண்டேன்; எனது தோழர்களும் கண்டு கொண்டார்கள். ஒன்பது வருடங்களுக்கு முன்னர் (தற்போது முப்பது வருடங்கள்)[iv] என்னோடு புர்தூர் பிரதேசத்திற்கு நாடு கடத்தப்பட்ட தலைவர்களுள் சிலர், நான் பணமின்மை காரணமாக வறுமைப் பட்டு இழிவடையாதிருக்க வேண்டும் என்பதற்காகத் தமது ஸக்காத் பணத்தை எடுத்துக் கொள்ளுமாறு என்னை மிகவும் வற்புறுத்தினர். நான் அவர்களிடம் ‘‘உண்மையில் என்னிடம் இருக்கும் பணம் மிகக் குறைவானதாகும். ஆனால், நான் சிக்கனமாக வாழ்கிறேன். மன நிறைவுக்கும் திருப்திக்கும் பழக்கப்பட்டு விட்டேன். இந்த வகையில் நான் உங்களை விட செல்வந்தனாவேன்’’ என்று கூறிவிட்டு வற்புறுத்தல்களுடன் கூடிய தொடர்ந்தேர்ச்சையான அவ்வேண்டுகோள்களை நிராகரித்து விட்டேன். கவனத்திற்குரிய விடயம் என்னவென்றால், இரண்டு வருடங்கள் கழிந்த பின்னர் எனக்கு ஸக்காத் தர முன் வந்தவர்களுள் சிலர் சிக்கனமின்மை காரணமாகக் கடனாளியாகினர். ‘‘புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே’’. அதன் பிறகு மேலும் ஏழு வருடங்களுக்கு கைவசமிருந்த குறைவான அந்தப் பணம் சிக்கன வாழ்வு காரணமாக எனக்குப் போதுமானதாக இருந்தது. மக்களிடம் கை நீட்டுகின்ற நிலை எனக்கு ஏற்படவில்லை. மேலும், ‘‘மனிதர்களிடம் தங்கி வாழாதிருத்தல்’’ என்ற எனது ஒரு வாழ்க்கைக் கோட்பாட்டை மீறாதிருக்க அது எனக்கு உதவியாக இருந்தது.

ஆம். சிக்கனமாக வாழாதவன், இழிவையும் உள்ளார்ந்த யாசகத்தையும், வறுமையையும் அடைந்து கொள்வதற்கான வேட்பாளனாகின்றான். இன்றைய காலத்தில் வீண்விரயத்துக்குக் காரணமாகும் செலவினங்கள் விலை கூடியதாகும். சிலவேளை அதன் விலையாக கௌரவமும், மானமும், இலஞ்சமும் கேட்கப்படுகின்றது. சிலவேளை, புனிதமான மார்க்கமும் கூட அதன்பொருட்டு அடகு வைக்கப்படுகின்றது. இறுதியில் சாபக்கேடான ஒரு தொகைப் பணம் தரப்படுகின்றது. அதாவது, ஆன்மீக ரீதியான நூறு தீனார் இழப்பால், சட ரீதியான நூறு தீனார் பெறுமதியான ஒரு பொருள் வாங்கப்பட முடியுமாக உள்ளது. ஆனால், சிக்கனத்தைக் கடைபிடித்து, அடிப்படைத் தேவைகளை அளவாகக் குறைத்து,

اِنَّ اللهَ هُوَ الرَّزَّاقُ ذُو الْقُوَّةِ الْمَتِينُ [v]

இல் பொதிந்துள்ள இரகசியத்தினதும்

وَمَا مِنْ دَابَّةٍ فِى اْلاَرْضِ اِلاَّ عَلَى اللهِ رِزْقُهَا [vi]

என்ற வசனத்தின் தெளிவான கருத்தின் அடிப்படையிலும் வாழ்பவர்கள், நினைத்துப் பாராதவிதமாக வாழ்க்கைக்குத் தேவையான வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்வார்கள். ஏனெனில், மேற்படி வசனங்கள் இறை வாக்குறுதிகளாகும். ஆம்! வாழ்வாதாரம் இரண்டு வகையானதாகும்.

**முதலாவது:** அடிப்படை வாழ்வாதாரமாகும், வாழ்வதற்குப் போதுமானதாகும். மேற்படி வசனத்தின் அடிப்படையில் இந்த வாழ்வாதாரமானது, இறை உத்தரவாதத்திற்குற்பட்டதாகும். மனிதனுடைய தெரிவுத் துஷ்பிரயோகம் குறுக்கிடாவிட்டால் அந்த அடிப்படை ஆகாரத்தை எந்நிலையிலும் பெற்றுக் கொள்ள முடியும். மார்க்கத்தையோ, மானம், மரியாதையையோ அடகு வைக்க வேண்டியதில்லை.

**இரண்டாவது:** தோற்றுவிக்கப்பட்ட, உருவகிக்கப்பட்ட வாழ்வாதாரமாகும். துஷ்பிரயோகம் காரணமாக அத்தியாவசியமற்ற தேவைகள் அத்தியாவசியமான தேவைகள் என்ற நிலையை அடைந்து பகட்டு வாழ்க்கை என்ற வியாதியினால் வேரூன்றி அதுவே பழக்கதோஷமாகவும்

---

[iv] இந்த சம்பவம் நிகழ்ந்த ஆண்டு, 1926

[v] அத்தாரியாத், 58

[vi] அல்ஹூத், 06

மாறி தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவிடுகின்றது. இந்த வாழ்வாதாரமானது இறை வாக்குறுதிக்குட்பட்டது அல்ல என்பதால் இந்த 'ரிஸ்க்'கைப் பெற்றுக் கொள்வது, விசேடமாக இந்தக் காலத்தில் மிகுந்த செலவுடையதாகும். அனைத்துக்கும் மேலாக, அந்தஸ்தை அடகு வைத்து இழிவைப் பொருந்திக் கொள்வதன் மூலமாகவும், சிலவேளை இழிந்த மனிதர்களின் காலை முத்தமிடுகின்ற அளவுக்கு உள்ளார்ந்த யாசக நிலைக்குத் தன்னை ஆளாக்கிக்கொள்வதன் மூலமாகவும், இன்னும் சிலவேளைகளில் நித்திய வாழ்வின் விமோசனத்திற்கான ஒளியான மார்க்கத்தின் புனிதங்களை அடகு வைப்பதன் மூலமாகவும் அந்த 'பரக்கத்' அகன்ற, தரித்திரம் நிறைந்த பொருட்களை மனிதர்கள் அடைந்து கொள்கின்றனர்.

மேலும், வறுமையும் துன்பமும் மேலோங்கிய இந்த யுகத்தில், பசியாலும் வறுமையாலும் பீடிக்கப்பட்ட மனிதர்களின் வேதனையிலிருந்து ஒரு பகுதி வேதனை, மனசாட்சி உள்ளவர்களுக்கு மனிதாபிமானம் காரணமாகத் தொற்றிக் கொள்கின்றது. இந்த வேதனையானது, மேற்படி ஹராம் கலப்படமான சம்பாத்தியத்தின் மூலம் அனுபவிக்கும் இன்பங்களை, உண்மையிலேயே மனசாட்சி இன்னும் இறக்கவில்லை எனில், மென்மேலும் வேதனையாக மாற்றும். இப்படிப்பட்ட ஒரு காலத்தில் சந்தேகத்துக்கிடமான பொருட்களை அத்தியாவசிய நிலையோடு நிறுத்திக் கொள்வது கட்டாயமாகும். ஏனெனில்,

إِنَّ الضَّرُورَةَ تُقَدَّرُ بِقَدْرِهَا

என்ற விதியின் படி, நிர்ப்பந்த நிலையில் ஹராமான பொருட்களிலிருந்து அத்தியாவசியமான அளவு மாத்திரமே பெற்றுக் கொள்ள முடியும், மேலதிகமானதை எடுக்க முடியாது. ஆம்! கஷ்டத்தில் வீழ்ந்த மனிதன், அசுத்தமான இறைச்சியிலிருந்து வயிறு நிறைகின்ற அளவிற்குச் சாப்பிட முடியாது. மாறாக, மரணிக்காதிருப்பதற்குத் தேவையான அளவே சாப்பிட முடியும். நிலைமை இவ்வாறிருக்க, பசியால் வாடும் நூறு மனிதர்களின் முன்னிலையில் பூரண சுவையை அனுபவித்து வயிறு முட்ட உண்டு புடைப்பது எங்ஙனம்?

சிக்கனமானது கண்ணியத்திற்கும் உயர்ச்சிக்குமான ஒரு காரணமாக இருக்கின்றது என்பதை நிரூபிக்கும் ஒரு சம்பவம் பின்வருமாறு: ஒரு சமயம் தாராளத் தன்மையில் உலகப் புகழ் பெற்ற வள்ளல் ஹாத்திம் தாஈ ஒருபெரும் விருந்துபசாரம் நடாத்துகின்றார். அதில் தனது விருந்தினர்களுக்காக அன்பளிப்புக்களை வாரி வழங்குகின்றார். அச்சமயம் யாரும் விடுபட்டார்களோ என்பதை அறிந்து கொள்வதற்காக அரங்கிலிருந்து வெளியேறி பாலை வெளியை நோக்கி நடக்க ஆரம்பிக்கின்றார். அங்கே ஒரு வயதான எளிய மனிதர் ஒரு பொதி முட்கள் நிறைந்த மூலிகைகளையும், சில உணவுகளையும் சுமந்து சென்று கொண்டிருந்தார். அந்த முட்கள் அவரது உடம்பைக் கீறி ஆங்காங்கே இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. ஹாத்திம் தாஈ முதியவரிடம் "ஹாத்திம் தாஈ பெரும் அன்பளிப்புக்களோடு விருந்துபசாரம் நடத்திக் கொண்டிருக்கின்றார். அங்கே சென்றால் ஐந்து காசு பெறுமதியான இந்த மூலிகைகளுக்குப் பதிலாக ஐநூறு காசு பெற்றுக் கொள்வீர்" என்றார். அந்த முதியவர் பின்வருமாறு பதிலளித்தார்: "என்னால் இந்த முட்கள் நிறைந்த சுமையைக் கண்ணியத்தோடு சுமக்க முடியும். ஆனால், ஹாத்திம் தாஈயுடைய நன்றிக் கடனைச் சுமக்க முடியாது". பின்னொரு காலத்தில் "நீங்கள் உங்களை விடத் தாராளத்தன்மையும், கண்ணியமும் மிக்கவராக யாரையும் கண்டு கொண்டீர்களா?" என்று ஹாத்திம் தாஈயிடம் வினவப்பட்ட போது, "அன்று பாலை வெளியில் சந்தித்த, மன நிறைவுடனும், சிக்கனத்துடனும் வாழும் அந்த முதியவரை என்னை விடவும் கண்ணியமிக்கவராகவும், உயர்ந்தவராகவும், தாராளத்தன்மை மிக்கவராகவும் காண்கின்றேன்" என்று பதிலளித்தார்.

**ஐந்தாவது அம்சம்**

கருணையாளன் அல்லாஹ், தனது தயாளத்தன்மை காரணமாக மிகவும் வறிய மனிதனுக்கு மிகப் பெரிய செல்வந்தனைப் போன்றும், ஏழைக்கு அரசர்களைப் போன்றும்

அருட்கொடைகளில் இருக்கும் சுவைகளை அனுபவிக்கச் செய்கின்றான். ஆம்! ஓர் ஏழை பசியும் சிக்கனமும் காரணமாக ஒரு காய்ந்த ரொட்டித் துண்டிலிருந்து பெற்றுக் கொள்ளும் சுவையானது, ஓர் அரசன் அல்லது ஒரு செல்வந்தன் வீண்விரயம் காரணமாக அனுபவிக்கும் அலுப்பு மற்றும் பசியின்மையுடன் சாப்பிடும் மிக உயர் தரமுடைய இனிப்புப் பண்டத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் சுவையை விட அதிகச் சுவையைக் கொண்டதாகும். ஆச்சரியம் என்னவெனில், வீண்விரயமும் ஊதாரித்தனமும் கொண்ட சில மனிதர்கள் இப்படிப்பட்ட சிக்கனதாரிகளை "உலோபி" என்று குறைபட்டுக் கொள்கின்றனர். நிச்சயமாக அவ்வாறல்ல. சிக்கனமானது கண்ணியமும் தாராளத்தன்மையும் ஆகும். உலோபித்தனமும் இழிவும் வீண்விரயக்காரர்களினதும் ஊதாரிகளினதும், பார்வைக்கு வள்ளல் போன்று தோற்றமளிக்கும் ஆடம்பர வாழ்வின் அகத் தோற்றங்களாகும். இஸ்பார்த்தா நகரில் எனது குடிசையில், இந்த நூலை எழுதிக் கொண்டிருந்த சமயம் நிகழ்ந்த பின்வரும் சம்பவம் இந்த உண்மைக்குப் பலம் சேர்க்கும் விதமாக உள்ளது: எனது நெறிமுறைகளுக்கும் வாழ்க்கைக் கோட்பாட்டுக்கும் முரணான வகையில், எனது மாணவர்களுள் ஒருவர் இரண்டரைக் கிலோ அளவு தேனை அன்பளிப்பாக எடுத்துக் கொள்ளுமாறு என்னை வற்புறுத்தினார். எவ்வளவு தான் எனது நெறிமுறையை அவரிடம் முன்வைத்த போதும் அதற்கு அவர் செவிசாய்க்கவில்லை. இறுதியில் நிர்ப்பந்த மேலீட்டால் அப்போது என்னுடன் அருகில் இருந்த மூன்று சகோதரர்களுக்கும் கொடுத்து, ஷ∴பானிலும் ரமழானிலும் முப்பது நாற்பது நாட்கள் அவர்களுக்கு இனிப்பு வழங்கும் நோக்கத்தோடும், கொண்டு வந்த மாணவனும் நன்மையைப் பெற்றுக் கொள்ளட்டும் என்ற எண்ணத்துடனும் அந்த சகோதரர்களிடம் தேனைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறினேன். என்னிடமும் ஏற்கனவே ஒரு கிலோ தேன் இருந்தது. அந்த மூன்று தோழர்களும் கூட உண்மையிலேயே இஸ்திகாமத்தை உடையவர்களாகவும், சிக்கனத்தைக் கடைப்பிடிப்பவர்களாகவும் இருந்தனர். என்ற போதிலும் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளுதல், தன்னை விட மற்றவர்களுக்காகத் தாராளத் தன்மையுடன் நடந்து கொள்ளுதல் போன்ற தமது உயர் பண்புகள் காரணமாக அவர்கள் சிக்கனத்தை மறந்து விட்டனர். மூன்றே இரவுகளில் இரண்டரைக் கிலோ தேனையும் காலி செய்து விட்டனர். நான் புன்னகைத்தவாறு "உங்களை முப்பது நாற்பது நாட்களுக்கு அந்தத் தேனினால் சுவையூட்ட நாடினேன், நீங்களோ முப்பதை மூன்றாகக் குறைத்து விட்டீர்கள், நிறைவானதாக ஆகட்டும்!" என்று கூறினேன். நானோ என்னிடமிருந்த தேனை சிக்கனத்தோடு செலவழித்தேன். ஷ∴பான் மற்றும் ரமழான் மாதம் முழுவதும் நானும் சாப்பிட்டேன். அல்லாஹ்வின் அருளால் அந்தச் சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் இ∴ப்தார் வேளைகளில் ஒவ்வொரு பெரிய தேக்கரண்டியளவு கொடுத்து, அதன் மூலமாக பெரியதொரு நன்மையைச் சம்பாதித்துக்கொள்ள அந்தச சிக்கனப் பண்பே காரணமாக அமைந்தது.

எனது நிலையை அவதானிப்பவர்கள், சில வேளை எனது இந்த நடவடிக்கையைக் கஞ்சத்தனமாக எண்ணலாம். ஏனைய மூன்று சகோதரர்களதும் மூன்று நாள் நிலைமையைத் தாராளத்தன்மையாகக் கணிக்கலாம். ஆனால், யதார்த்தத்தில் பார்வைக்கு உலோபித்தனம் போன்று தோன்றும் எனது அந்த நடவடிக்கைக்குப் பின்னால் உயர்ந்த ஒரு கண்ணியமும், பெரியதொரு பரக்கத்தும், மிகையானதொரு நன்மையும் மறைந்திருப்பதைக் கண்டு கொண்டிருப்பீர்கள். மேலும், அந்தத் தாராளத்தன்மை போன்று தோற்றமளிக்கும் வீண்விரயத்தைத் தொடர்ந்து, அந்த நிலையிலிருந்து மீளவில்லை என்றிருப்பின் உலோபித்தனத்தை விடவும் மோசமான ஒருவகை கையேந்தும் நிலைக்கும், பிறர் மீது தங்கி வாழும் நிலைக்கும் அவர்கள் தள்ளப்பட்டிருக்கலாம்.

### ஆறாவது அம்சம்

சிக்கனத்துக்கும் உலோபித்தனத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடு உள்ளது. பணிவானது எவ்வாறு இழிகுணமான கூழைக்கும்பிடு போடுகின்ற குணத்தோடு செயலளவில் ஒத்தும், உள்ளூற வேறுபட்டும் இருக்கின்ற சிறப்புக்குரிய ஒரு பண்பாக இருக்கின்றதோ, வகார் என்ற தலை நிமிர்ந்து நிற்கின்ற பண்பானது, மோசமான குணமான அகம்பாவத்தோடு செயலளவில் ஒத்தும், உள்ளூற வேறுபட்டும் இருக்கின்ற சிரேஷ்டமான ஒரு பண்பாக

இருக்கின்றதோ, அவ்வாறே, இறைத்தூதர்களின் உன்னதப் பண்புகளுள் ஒன்றும், பிரபஞ்ச வெளியில் கோலோச்சும் சர்வஞானமிக்க இறை ஒழுங்கிற்குப் பின்னாலுள்ள ஞானங்களுள் ஒன்றுமான சிக்கனமானது, ஈனத்தனம், கருமித்தனம், பேராசை மற்றும் அவா போன்ற இழி குணங்களின் கலவையான உலோபித்தனத்தோடு எந்தவிதத் தொடர்பும் அற்றதாகும்; வெறுமனே செயலளவில் ஓர் ஒற்றுமை இருக்கின்றது, அவ்வளவே!

இந்தத் தாத்பரியத்தை நிரூபிக்கும் ஒரு நிகழ்வினை நோக்குவோம். ஸஹாபாப் பெருமக்களுள் புகழ் பெற்ற ஏழு அப்துல்லாக்களுள் ஒருவரும், நீதியின் சின்னம் உமரே ஃபாரூக் (ரழி) அவர்களது கண்ணியமிக்க மூத்த புதல்வரும், ஸஹாபா அறிஞர்களுள் தலை சிறந்த ஒருவருமான வள்ளல் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் ஒரு முறை சந்தையில் கொடுக்கல் வாங்கலின் போது நாற்பது காசு விடயத்தில், சிக்கனம் மற்றும் வியாபாரத்தின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு பலமானதொரு வாதத்தில் இறங்குகின்றார். இதை அவதானித்த ஒரு ஸஹாபி, 'அமீருள் மு'.மினீனான கலீபா உமர் (ரழி) அவர்களது மகன் நாற்பது காசுக்காக இவ்வாறு நடந்து கொள்வதா?' என்று அங்கலாய்த்தவராக உண்மைத் தன்மையை அறிந்து கொள்வதற்காக அந்த இமாமைப் பின்தொடர்கிறார். இறுதியில் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் தனது வீட்டினுள் நுழைகின்றார். அப்போது அங்கே வாயிற்படியில் ஓர் ஏழை மனிதனைக் காண்கிறார். அவருடன் சற்று அளவளாவி விட்டு அவ்விடம் விட்டகல்கின்றார். சிறிது நேரத்தின் பின் வீட்டிலிருந்து வெளியேறுகின்றார். அப்போது அங்கே இன்னுமோர் ஏழையை அவதானிக்கின்றார். அவருடனும் சிறிது அளவளாவி விட்டு அவ்விடம் விட்டகல்கின்றார். தூரத்திலிருந்து நடப்பவற்றை அவதானித்துக் கொண்டிருந்த அந்த ஸஹாபி வியப்பு மேலீட்டால் அந்த ஏழைகளை அணுகி, "இமாம் உங்களுக்கருகில் இருந்து என்ன செய்தார்?" என்று வினவினார். இருவருமே இமாமவர்கள் தமக்கு ஒரு தங்கம் தந்ததாகக் கூறினர். அந்த ஸஹாபி ஆச்சரியமேலீட்டால் "ஃஸுப்ஹானல்லாஹ், ஒரு புறம் சந்தையில் நாற்பது காசுக்காக வாதிக்கின்றார், மறு புறம் வீட்டில் எண்ணாயிரம் காசு பெறுமதியான தங்கத்தை யாரும் காணாத விதமாக பூரண மனத் திருப்தியோடு அன்பளிப்புச் செய்கின்றார்" என்றவராக அப்துல்லாஹ் இப்னு உமர்(ரழி) அவர்களைச் சந்தித்துக் காரணத்தை வினவுகின்றார். "இமாம் அவர்களே எனது சந்தேகத்தைத் தீர்த்து விடுங்கள், சந்தையில் இவ்வாறு நடந்து கொண்டீர்கள். வீட்டில் இவ்வாறு நடந்து கொண்டீர்கள்..ஏன்?". அதற்கு இமாமவர்கள், "சந்தையில் நடந்த நிகழ்வின் பின்புலத்தில் சிக்கனம், முன்னெச்சரிக்கை மற்றும் வியாபாரத்தின் உயிர் நாடியான பாதுகாப்பு மற்றும் விசுவாசத்தை நிலைநாட்டல் என்பன அடிப்படையாக இருந்தன. இது உலோபித்தனம் அன்று. வீட்டில் ஏழைகள் விடயத்தில் நடந்துகொண்ட முறையானது, உள்ளத்திலிருக்கும் கருணை உணர்வு மற்றும் ஆன்மாவின் திருப்தி என்பவற்றின் வெளிப்பாடாகும். முதலாவது உலோபித்தனமுமல்ல, இது வீண்விரயமுமல்ல" என்று பதிலளித்தார்கள். இமாம் அபூ ஹனீஃபா அவர்கள் இந்த உண்மையைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

لاَ اِسْرَافَ فِى الْخَيْرِ كَمَا لاَ خَيْرَ فِى الاِسْرَافِ

"வீண்விரயத்தில் எவ்வாறு நலவு என்பது கிடையாதோ அவ்வாறே (தகுதி உடையவர்களுக்கு செய்யப்படும்) நற்செயல்களிலும் நல்லறத்திலும் எந்த வித வீண்விரயமும் கிடையாது."

**ஏழாவது அம்சம்**

வீண்விரயம் பேராசைக்கு வழிவகுக்கும், பேராசை மூன்று தீய விளைவுகளைத் தரும்.

**முதலாவது:** திருப்தியின்மையாகும். திருப்தியின்மையானது கஷ்டப்பட்டு உழைப்பதற்கான உற்சாகத்தை மழுங்கடிக்கும்; நன்றிக்குப் பதிலாக முறைப்பட்டுக் கொள்ளவைக்கும்;

சோம்பேறித்தனத்தை அதிகரிக்கச் செய்யும். ஆகவே, சட்டபூர்வமான, ஆகுமாக்கப்பட்ட குறைவான சம்பாத்தியத்தை[1] உதறித் தள்ளிவிட்டு சட்டவிரோதமான, வருத்தமில்லாத சம்பாத்தியத்தை நோக்கி உந்தப்படுவர். இந்தப் பாதையில் கண்ணியத்தையும் அந்தஸ்தையும் அடகு வைப்பர்.

**பேராசையின் இரண்டாவது விளைவு:** விரக்தியும் அழிவுமாகும். இலக்குத் தவறியவனாக, எதிலும் பிடிப்பற்ற விரக்திக்கு ஆளாகி, உதவி ஒத்தாசை பெற்றுக் கொள்ள முடியாதவனாக மாறி விடுகிறான். மேலும், اَلْحَرِيصُ خَائِبٌ خَاسِرٌ “பேராசை அழிவுக்கும் தோல்விக்குமான அடிப்படையாகும்” என்ற முதுமொழியின் மொத்த உருவமாக மாறி விடுகின்றான். பேராசை மற்றும் மனத்திருப்தி என்பவற்றின் எதிர்விளைவுகள் உயிரின உலகில் மிகவும் விசாலமானதொரு நியதியாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. அதாவது, உணவுத் தேவையுடைய தாவரங்களில் காணப்படும் இயல்பான மனத்திருப்தி காரணமாக அவற்றுக்கான ஆகாரங்கள் அவற்றை நோக்கி ஓட்டுவிக்கப்படுவதாக இருக்க, மிருகங்கள் பேராசையுடன் உணவுக்குப் பின்னால் அலைந்து திரிந்து இறுதியில் வருத்தப்பட்டவையாகவும் பலவீனப்பட்டவையாகவும் திரும்புவதானது பேராசையினால் ஏற்படும் பெரும் நஷ்டத்தையும் மனத்திருப்தியினால் ஏற்படும் பெரும் பலனையும் காட்டி நிற்கின்றது. அத்தோடு, ஒட்டு மொத்த பாலகர் குலத்தினதும் மெய்ம்மொழிகளில் பிரதிபலிக்கும் மனத்திருப்தியானது, அவைகளுக்காக வேண்டி பால் போன்ற தூய்மையும், இனிமையும், ஊட்டமும் நிறைந்த ஒரு பானம் நினையாப் புறத்திலிருந்து ஊற்றெடுப்பதற்கான காரணமாக இருப்பதுடன், மறுபுறம் காட்டுமிராண்டி விலங்குகள் பேராசையுடன் உணவை நோக்கிப் பாய்ந்த போதிலும் குறைபாடுடைய, அழுக்கான உணவுகளையே பெற்றுக் கொள்ள முடியுமாக இருப்பது மேற்படி உண்மையை இன்னும் தெளிவாக நிரூபிக்கின்றது. மேலும், பூரண மனநிறைவுத் தன்மையை வெளிப்படுத்தும், நன்கு பருத்த புத்தி சாதுரியமற்ற சாதுவான மீனினங்கள் நிரப்பமான ஆகாரங்களைப் பெற்றுக் கொள்ளும் போது, மறு புறம் நரி, குரங்கு போன்ற தந்திரமிக்க விலங்குகள் பேராசையோடு உணவுக்குப் பின்னால் அலைந்து திரிந்தாலும்கூட போதியளவு உணவைப் பெற்றுக் கொள்ள முடியாமை காரணமாக மெலிந்து போயிருப்பதும், பேராசை மிகப் பெரியதொரு வதைப்படுத்தும் காரணியாகவும், மனத்திருப்தி மிகப் பெரியதொரு நிம்மதியளிக்கும் காரணியாகவும் இருக்கின்றது என்பதை நிரூபிக்கின்றது.

மேலும், யூத சமூகம் பேராசை, வட்டி, நயவஞ்சகம், மோசடி என்பவற்றுடன் இழிவுபடுத்தப் பட்டவர்களாகவும், கைசேதப் பட்டவர்களாகவும், அதிக பட்சம் வாழ்வதற்குத் தேவையான ஆகாரத்தை மட்டுமே பெற்றுக் கொள்ள முடியுமானவர்களாக இருக்கின்ற போது, மறுபுறம் பாலைவன நாடோடிகள் பூரண மனத்திருப்தியோடும், கண்ணியத்தோடும் வாழ்ந்து நிறைவான வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்வதும் மேற்குறிப்பிடப்பட்ட உண்மைக்கான இன்னுமொரு சான்றாகும். மேலும், அதிகமான ஆலிம்கள்[1] மற்றும் இலக்கியவாதிகள்[2]

---

[1] : *சிக்கனமின்மை காரணமாக நுகர்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடையும். அனைவரும் பார்வையை அரச உத்தியோகத்தை நோக்கித் திருப்புவர். இந்நிலையில் சமூக வாழ்வின் தூண்களான கலை, வியாபாரம், விவசாயம் என்பன தேக்கமடையும். அந்தச் சமூகமும் பின்தங்கி தனக்குள் சுருங்கிக் கொள்ளும்; வறுமையில் வாடும்.*

[1] : *ஈரானின் நீதியான மன்னர்களுள் ஒருவரான நுஷிரிவானுடைய ஆலோசகர், புத்திக் கூர்மை மிக்க பிரசித்தம் வாய்ந்த ஆலிம் புஸுர்ஜ் மிஹ்ரிடம் “ஏன் அறிவு, அதிகாரத்தை விட ஏற்றம் மிக்கதாக இருந்த போதிலும் ஆலிம்கள் ஆட்சியாளர்களின் அவைகளில் அதிகமாகக் காணப்படுகின்றனர், ஆட்சியாளர்களை ஆலிம்களின் அவைகளில் காணமுடியாதுள்ளது.?” என்று வினவினார். புஸுர்ஜ் மிஹ்ர் பின்வருமாறு பதிலளித்தார்: “ஆலிம்களின் அறிவும் ஆட்சியாளர்களின் அறியாமையுமே காரணமாகும்.” அதாவது, ஆட்சியாளர்கள், தமது அறியாமை காரணமாக அறிவின் பெறுமதியை அறியாதிருப்பதால் அதைத் தேடி ஆலிம்களின் அவைக்குச் செல்வதற்கான தேவையை உணர்வதில்லை. ஆலிம்களோ அறிவின் காரணமாக*

தமது புத்திக் கூர்மை காரணமாகத் தோன்றும் ஒரு வகை பேராசை காரணமாக வறிய நிலைக்குத் தள்ளப்படுவதும், அதேவேளை மிகவும் முட்டாள்களான பலமற்றவர்களின் இயல்பிலேயே குடி கொண்டிருக்கும் மனத்திருப்தி காரணமாக செல்வந்தர்களாக மாறுவதும், ஹலாலான ஆகாரமானது பலவீனம் மற்றும் வறுமையின் காரணமாக வந்தடைகின்றது; மாறாக வலிமை மற்றும் சுயதெரிவாற்றல் காரணமாக அல்ல என்பதைத் தெட்டத் தெளிவாக நிரூபிக்கின்றது. சிலவேளை, அந்த ஹலாலான ஆகாரம், வலிமை மற்றும் சுய தெரிவாற்றலுடன் எதிர் மறையாக அதிகரிக்கும். ஏனெனில், குழந்தைகளின் வலிமையும் சுயதெரிவாற்றலும் அதிகரிக்க அதிகரிக்க வாழ்வாதாரம் குறைந்து, அவர்களை விட்டும் தூரமாக ஆரம்பிக்கும்; பெற்றுக் கொள்வது கஷ்டமாக மாறும். [vii] اَلْقَنَاعَةُ كَنْزٌ لاَ يَفْنٰى என்ற ஹதீஸின் உட்கருத்துக்கமைய, மனத்திருப்தியானது அழகிய வாழ்வாதாரத்துக்கும், நிம்மதியான வாழ்வுக்குமான கருவூலமாகும். பேராசையோ நஷ்டத்தினதும் வறுமையினதும் ஊற்றுக்கண் ஆகும்.

**மூன்றாவது விளைவு:** பேராசை உளத்தூய்மையை அழித்து மறுமைக்கான அமல்களைப் பாழாக்கி விடும். ஏனெனில், தக்வா உடைய ஒருவரிடம் பேராசையும் கூடவே காணப்படும் எனில், மனிதர்கள் தன்னை நோக்க வேண்டும் என்று விரும்புவான். இவ்வாறு முகஸ்துதிக்கு ஆளாகுபவன் பூரண உளத்தூய்மையை அடைந்து கொள்ள முடியாது. இந்த விளைவானது மிகவும் பாரதூரமானதும் கருத்திற்கொள்ளப்பட வேண்டியதுமாகும்.

**சுருக்கமாக:** வீண்விரயம், திருப்தியின்மையை விளைவாகத் தரும். திருப்தியின்மையானது, உழைக்கும் ஆர்வத்தை அழித்து சோம்பேறித்தனத்தை அதிகரிக்கச் செய்யும்; வாழ்க்கையைப் பற்றி முறைப்பட்டுக் கொள்வதற்கான வாயிலைத் திறந்து தொடர்ந்தேர்ச்சையாக முறைப்பட்டுக்கொள்ள வைக்கும்[1]. மேலும், உளத்தூய்மையை அழித்து முகஸ்துதிக்கான வாயிலைத் திறந்து விடும். அத்துடன், சுயகௌரவத்தைச் சுக்குநூறாக்கி, உள்ளார்ந்த யாசகத்துக்கான பாதையைக் காட்டிக் கொடுக்கும். சிக்கனமானது, மனத்திருப்தியை விளைவாகத் தரும்; [viii] عَزَّ مَنْ قَنَعَ ذَلَّ مَنْ طَمَعَ என்ற ஹதீஸின் உட்கருத்துப்படி உழைத்து வேலைசெய்வதற்கான பலத்தைக் கொடுக்கும்; உற்சாகத்தை அதிகரிக்கச் செய்து வேலை செய்ய வைக்கும். உதாரணமாக, ஒரு நாள் வேலை செய்து மாலை நேரம் பெற்றுக் கொண்ட ஊதியத்தைக் கொண்டு திருப்திப்பட்டு சந்தோசமடைவதன் காரணமாக அடுத்த நாள் மீண்டும் உழைப்பான். வீண்விரயக்காரனோ, திருப்தியின்மையின் விளைவாக, அடுத்த நாள் வேலைக்குச் செல்ல மாட்டான், சென்றாலும்

---

*பொருட்களின் பெறுமதியையும் கூட விளங்கி இருப்பதால் அவற்றைத் தேடி ஆட்சியாளர்களின் அவையை நாடுகின்றனர்." ஆம் புஸுர்ஜ் மிஹ்ர், ஆலிம்களிற்கு மத்தியில் வறுமைக்குக் காரணமாக இருக்கின்ற புத்திக் கூர்மையின் வெளிப்பாட்டால் வரும் ஒரு வகை பேராசையை அழகியதோர் சாடையினூடாக நளினமாக முன்வைக்கின்றார் – ஹுஸ்ரவ்*

[2] **:** *இதற்குப் பலம் சேர்க்கும் ஒரு நிகழ்வு: பிரான்ஸ் நாட்டில் இலக்கியவான்களுக்கு, இலக்கியத்தை சிறந்த யாசக ஊடகமாக பயன் படுத்துகின்றமைக்காக சிறப்பு யாசகச் சான்றிதழ்கள் வழங்கப் படுகின்றது – சுலைமான் ருஷ்த்*

[vii] அத்தபரானி, அல்முஃஜமுல் அவ்ஸாத்: 7:84 ; அல்பைஹகி, அஸ்ஸுஹத்: 2:88 ; அல்அஜ்லூனி, கஷ்ஃபுல்ஹஃபா: 2:133

[1] **:** *ஆம் எந்தவொரு வீண்விரயக்காரனை சந்தித்தாலும், குறைபாடுகளையும் முறைபாடுகளையுமே செவிமடுப்பீர்கள். எவ்வளவு பெரிய செல்வந்தன் தான் ஆனாலும் மீண்டும் மீண்டும் நாவு முறைப்பாடு செய்து கொண்டேயிருக்கும். மிகவும் வறுமையான ஆனால் மனத்திருப்தி கொண்ட ஒருவர் மிகவும் வறுமையானவராக இருப்பினும், அவரது நாவு இறைநன்றியால் திளைத்திருப்பதைக் காண்பீர்கள்.*

[viii] இப்னுல் அஸீர், அந்நிஹாயா க(ே)ரீபில் ஹதீஸ்: 4:114 ; அஸ்(z)ஸபீதி, தாஜுல் அரூஸ்: 22:90

வேண்டா வெறுப்போடு வேலை செய்வான். மேலும், சிக்கனம் காரணமாகப் பெற்றுக்கொள்ளும் மனத்திருப்தி இறை நன்றிக்கான வாயிலைத் திறந்து விடும்; முறைப்பட்டுக் கொள்வதற்கான வாயிலை மூடி விடும். வாழ்க்கை பூராகவும் இறை நன்றி கொண்டவனாக அவன் வாழ்வான். மேலும், மனத்திருப்தி காரணமாக மனிதர்களில் தங்கியிருக்காமல் வாழ்வதால் மனிதர்கள் தன்னை நோக்க வேண்டும் என்று அவன் ஆசிக்க மாட்டான். ஆக, உளத்தூய்மைக்கான வாயில் திறக்கப்படும் முகஸ்துதிக்கான வாயில் மூடப்படும்.

சிக்கனமின்மை மற்றும் வீண்விரயத்தின் பாரதூரமான இழப்புக்களுக்கு ஒரு சமயம் நானும் ஒரு சாட்சியாளனாக இருந்துள்ளேன். ஒன்பது வருடங்களுக்கு முன்னர் பாக்கியம் பெற்ற ஒரு பெருநகரத்திற்குச் சென்றிருந்தேன். பனிக்காலம் என்பதால் அந்த நகரின் செல்வ ஊற்றுக்களை என்னால் கண்டுகொள்ள முடியவில்லை. அல்லாஹ் ரஹ்மத் செய்வானாக, அந்த ஊரின் இமாமவர்கள் பல முறை என்னிடம் “இந்த ஊர் மக்கள் ஏழைகள்” என்ற விடயத்தை மீட்டிக் கொண்டிருந்தார். இந்த வார்த்தை என்னை மிகவும் கவலையில் ஆழ்த்தியது. ஐந்து ஆறு வருடங்களாக அந்த ஊரின் நிலைமைக்காக தொடர்ந்தும் வருத்தப்பட்டேன். எட்டு வருடங்களுக்குப் பிறகு வசந்த காலம் ஒன்றில் மீண்டும் அந்த ஊருக்குச் சென்றேன். அங்குள்ள விளைச்சல் நிலங்களை அவதானித்தேன். உடனே மர்ஹூம் இமாமின் வார்த்தை நினைவுக்கு வந்தது. ஆச்சரியத்தால் ‘ஸுப்ஹானல்லாஹ்!’ என்றேன். ‘இந்த விளைச்சல் நிலங்கள் தரும் விளைச்சல் இந்த நகரத்தின் தேவையை விடவும் மிக மிக அதிகமானதாக உள்ளதே! இந்த ஊர் மக்கள் பெரும் செல்வந்தர்களாக இருக்க வேண்டும் அல்லவா!’ என்று வியப்படைந்தேன். பிறகு என்னை ஏமாற்றாத, சத்தியத்தைப் புரிந்து கொள்ளும் விடயத்தில் எனது துணையாக இருக்கின்ற உண்மையான உள்ளுணர்வின் மூலமாக நான் அறிந்து கொண்டது இதுதான்: சிக்கனமின்மை மற்றும் வீண்விரயம் காரணமாக அந்த நகரத்திலிருந்து பரக்கத் அகன்று விட்டது. ஆக, அவ்வளவு செல்வ ஊற்றுக்களான விளைநிலங்களைப் பெற்றிருந்தும் அந்த ஊரை இமாம் அவர்கள் கூறியது போன்று வறுமை தொற்றிக் கொண்டிருந்தது.

ஆம்! ஸக்காத் கொடுப்பதும் சிக்கனமும் பொருளில் பரக்கத்திற்கான காரணிகளாக இருப்பது போன்றே, வீண்விரயமும் ஸக்காத்தைப் புறக்கணிப்பதும் பரக்கத்தைத் தடைப்படுத்துகின்ற காரணிகளாக இருக்கின்றன என்பதற்குப் பல்வேறு சம்பவங்கள் சாட்சியாக இருக்கின்றன.

இஸ்லாமிய சிந்தனையாளர்களின் பிளேட்டோவாகவும், வைத்தியர்களின் ஷெய்க் ஆகவும், தர்க்கவியலாளர்களின் உஸ்தாத்தாகவும் இருக்கின்ற பிரபல மேதையான அலி இப்னு ஸீனா தனியாக மருத்துவ விடயத்தில்

كُلُوا وَاشْرَبُوا وَلاَ تُسْرِفُوا

என்ற வசனத்திற்குப் பின்வருமாறு விரிவுரை வழங்கியுள்ளார்:

جَمَعْتُ الطِّبَّ فِى بَيْتَيْنِ جَمْعًا * وَحُسْنُ الْقَوْلِ فِى قِصَرِ الْكَلاَمِ * فَقَلِّلْ اِنْ اَكَلْتَ وَبَعْدَ اَكْلٍ تَجَنَّبْ * وَالشِّفَاءُ فِى الْاِنْهِضَامِ * وَلَيْسَ عَلَى النُّفُوسِ اَشَدُّ حَالاً * مِنْ اِدْخَالِ الطَّعَامِ عَلَى الطَّعَامِ

அதாவது, “ஒட்டு மொத்த மருத்துவத்தையும் இரண்டே வரிகளில் சுருக்குகிறேன்: வார்த்தையின் அழகு அதன் சுருக்கத்திலாகும். சாப்பிடும் போது குறைவாகச் சாப்பிடு! சாப்பிட்ட பிறகு குறைந்தது நான்கு ஐந்து மணித்தியாலங்களுக்கு மீண்டும் சாப்பிடாதே! ஆரோக்கியம் சமிபாட்டிலாகும். அதாவது, இலகுவாகச் சமிபாடு அடையக் கூடிய அளவு

சாப்பிடு! ஆன்மாவுக்கும் இரைப்பைக்கும் மிகப் பளுவான நிலை உணவுக்கு மேல் உணவைக் கொட்டுவதாகும்.”[1]

**ஆச்சரியமூட்டக் கூடியதும் படிப்பினை மிக்கதுமான ஓர் இறை ஏற்பாடு:** சிக்கனம் சம்பந்தமான இந்த நூலை மூன்று அனுபவமற்றவர்கள் உட்பட மொத்தமாக ஆறு பேர், வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு மூலப் பிரதிகளிலிருந்து, முற்றிலும் வித்தியாசமான எழுத்தணிகளைக் கொண்டு எழுதிய போதிலும் அவர்கள் எழுதிய ஒவ்வொரு பிரதியிலும் ஒன்றையொன்று பார்க்கும் விதமாக உள்ள “அலி.்.ப்” களின் எண்ணிக்கை துஆவிலுள்ள அலி.்.ப்களை சேர்க்காத விடத்து 51 ஆகவும் அவற்றையும் சேர்த்துக் கொள்ளும் இடத்து 53 ஆகவும் பொருந்துகின்றது. அத்தோடு, இந்த ஆக்கம் எழுதப்பட்ட வருடம் ரூமி கலண்டர் படி (13)51 ஆகவும் ஹிஜ்ரி கலண்டர் படி (13)53 ஆகவும் இருப்பது மற்றும் மேற்படி அலி.்.ப்களின் எண்ணிக்கைக்கும் ஆண்டுகளுக்கும் இடையிலுள்ள பொருத்தப்பாடு என்பன நிச்சயமாக தற்செயல் நிகழ்வாக இருக்க முடியாது. இது, சிக்கனத்தில் பொதிந்திருக்கும் பரக்கத்தானது கராமத் அந்தஸ்து வாய்ந்தது என்பதற்கான ஒரு சமிக்ஞையாகும். மேலும், இந்த வருடம் சிக்கன வருடம் என்று பிரகடனப்படுத்தப்படுவதற்கு அருகதையுள்ளதாகும்.

ஆம்! இந்த சிக்கனத்தில் பொதிந்திருக்கும் கராமத் இரண்டு வருடங்களுக்குப் பிறகு நிரூபிக்கப்பட்டது. அதாவது, இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது எங்கும் பரவிய பஞ்சம், அழிவு, விரயம் என்பன மனித குலத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது.

سُبْحَانَكَ لاَ عِلْمَ لَنَا اِلاَّ مَا عَلَّمْتَنَا اِنَّكَ اَنْتَ الْعَلِيمُ الْحَكِيمُ

---

[1] : *அதாவது உடம்பிற்கு மிகவும் பாதகமானது குறைந்தது நான்கு ஐந்து மணித்தியாலங்கள் இடைவெளியின்றி உணவு உண்பதும், சுவை காரணமாக விதவிதமான உணவுகளை ஒன்றன் பின் ஒன்றாக வயிற்றில் கொட்டுவதுமாகும்.*

**(ரிஸாலே-இ நூர் தொகுப்பின் இருபத்தி இரண்டாம் வார்த்தையிலிருந்து)**

**இரண்டாவது அத்தியாயம்**

إِنَّ اللهَ هُوَ الرَّزَّاقُ ذُو الْقُوَّةِ الْمَتِينُ

وَكَأَيِّنْ مِنْ دَابَّةٍ لاَ تَحْمِلُ رِزْقَهَا اَللهُ يَرْزُقُهَا وَإِيَّاكُمْ وَهُوَ السَّمِيعُ الْعَلِيمُ

ஈமான் கொண்டவர்களே! முந்தைய அத்தியாயத்தில் குரோதம் வளர்ப்பது எப்படிப்பட்ட தீங்குகளை விளைவிக்கக் கூடியது என்பதை அறிந்து கொண்டீர்கள். அத்தோடு, பேராசையும் கூட குரோதத்தைப் போன்று இஸ்லாமிய சமூக வாழ்வுக்கு மிகப் பெரியதொரு தீங்கு விளைவிக்கும் நோயாக இருக்கின்றது என்பதை அறிந்து கொள்ளுங்கள். பேராசை விரக்திக்கான காரணமாகும்; இழிவை வரவழைக்கக்கூடிய பயங்கரமானதொரு வியாதியுமாகும். அது நிராசையையும் வறுமையையும் கொண்டு வந்து சேர்க்கும். ஆம்! பிற சமூகங்களை விடவும் உலகத்தின் பின்னால் பேராசையுடன் மோகம் கொண்டு அலையும் யூத சமூகம் அடைந்திருக்கும் இழிவும் அவமானமும் இந்த உண்மைக்கான பலமானதொரு ஆதாரமாகும். ஆம்! உயிரின உலகில் மிகவும் விசாலமான வட்டத்திலிருந்து தனித்தனி உறுப்பினர் வரை, ஒவ்வொரு மட்டத்திலும் பேராசையின் மோசமான விளைவுகள் பிரதிபலிக்கின்றன. தவக்குலோடு கூடிய வாழ்வாதாரத் தேடலானது முந்தையதற்கு மாற்றமாக மன நிம்மதியைத் தருவதோடு அனைத்து மட்டங்களிலும் அழகிய விளைவுகளைப் பிரதிபலிக்கின்றது.

ஆம்! உயிரினங்களுள் ஒன்றும் ஆகாரத் தேவை உடையதுமான கனி மரங்கள் மற்றும் தாவரங்கள், தவக்குல் நிலையில் ஆன்ம திருப்தியோடு, பேராசையின்றி, தமக்குரிய இடங்களில் அவ்வாறே இருந்து கொள்வதானது அவற்றுக்கான ஆகாரங்கள் அவற்றின் காலடி வரை வருவதற்குக் காரணமாக உள்ளன; மிருகங்களை விட பல மடங்கு அதிகமான கன்றுகளைப் பராமரிக்கின்றன. மிருகங்களோ, பேராசையோடு உணவு தேடி அலைந்து, கடுமையான கஷ்டங்களுக்கு மத்தியில், குறைவான ஆகாரத்தையே பெற்றுக் கொள்ள முடியுமானவையாக உள்ளன.

மேலும், ஜீவராசிகள் உலகில், இயலாமை மற்றும் பலவீனம் கலந்த தமது மெய்ம்மொழிகளால் தவக்குலை பிரதிபலிக்கும் இளம் கன்றுகளுக்கு முறையான, பரிபூரணத்துவமும் ஊட்டமுமிக்க, மிருதுவான ஓர் ஆகாரம் நினையா விதத்தில் இறை கஜானாவிலிருந்து வழங்கப்படுவதாக இருக்க, மறு புறம் பேராசையுடன் உணவுகளை நோக்கிப் பாயும் வேட்டையாடும் விலங்குகள் கடுமையான கஷ்டங்களுக்கு மத்தியில் முறையற்ற விதமாக அசுத்தமான உணவுகளையே பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பது, பேராசை நிராசைக்கான காரணியாகவும் தவக்குலும் மனத்திருப்தியும் இறை கருணையை ஈர்ப்பதற்கான காரணியாகவும் இருக்கின்றன என்பதை நிரூபிக்கின்றது.

மேலும், மனித குலத்தில் பிற சமூகங்களை விட பேராசை மற்றும் மோக மிகுதியால் உலகத்தைப் பற்றிக் கொண்டு, உலக வாழ்வோடு தம்மை ஒட்டு மொத்தமாகப் பிணைத்துக் கொண்ட யூத சமூகம் கடுமையான கஷ்டங்களுக்கு மத்தியில் ஹராமான வட்டியின் மூலம் சம்பாதித்துக் கொண்ட செல்வத்தால் –குறித்த ஒரு காலத்திற்கு அந்த செல்வத்தைக் கட்டிக் காத்து அதற்குக் காவலனாக இருப்பதற்கு அப்பால்- வெறுமனே தன்னளவில் மிக அடிமட்டப் பயனை அடைந்து கொண்டுவிட்டு மறுபுறம் இந்தச் செல்வத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நயவஞ்சகத்தனம், வட்டி என்பவற்றைப் பயன்படுத்திய காரணத்தினால் பிற சமூகங்களிடமிருந்து அனுபவிக்கும் மிகுந்த கேவலமும் துன்பமும் நிறைந்த புறக்கணிப்பும், இன அழிப்புக்களும் பேராசை அழிவிற்கும் இழிவிற்குமான மூலமாக இருக்கின்றது என்பதை ஆணித்தரமாக நிரூபிக்கின்றது.

மேலும், பேராசைக்கார மனிதன், எப்போதும் நஷ்டத்தையே அடைந்து கொள்வான் என்பதை நிரூபிப்பதற்குச் சான்றாக எவ்வளவு அதிகமான நிகழ்வுகள் இருக்கின்றன எனில், ‘‘பேராசை பெரு நஷ்டம்’’ என்பது முதுமொழியாக மாறி ஒட்டுமொத்த மனித சமூகத்தினதும் பார்வையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொது உண்மையாக மாறியுள்ளது. யதார்த்தம் இதுவென்பதால், மிகையாகப் பொருள் தேடும் ஆசை இருக்கின்றது எனில், பேராசையோடன்றி மனத்திருப்தியோடு பொருள் தேடு, ஆக வருகின்ற பொருள் நிறைவாக வந்து சேரட்டும்.

மனத்திருப்தி உடையவர்களுக்கும், பேராசைக்காரர்களுக்கும் உள்ள வேறுபாடு பின்வரும் இரண்டு மனிதர்களை ஒத்ததாகும்: இரண்டு மனிதர்கள் பெரியதொரு மனிதரின் மாளிகைக்குச் செல்கின்றனர். ஒருவன் உள்ளத்தில் ‘‘என்னை அந்த மகான் ஏற்றுக்கொண்டு, வெளியில் வீசும் குளிர் காற்றிலிருந்து பாதுகாப்புத் தருவதொன்றே போதுமானது; மிகக் கீழுள்ள நிலக்கீழ் மாடியில் ஒரு சாய்மானத்தை தருவதுகூட அவர்கள் எனக்குச் செய்யும் மிகப் பெரிய புண்ணியமாகும்.’’ என்று நினைத்துக் கொள்கிறான். இரண்டாவது மனிதனோ, ஏதோ அந்த மாளிகையில் தனக்கும் உரிமை இருக்கின்றது போன்ற தோரணையில், எல்லோரும் தனக்குப் பணிவிடை செய்யக் கடமைப்பட்டுள்ளனர் என்ற நினைப்பில் ‘‘எனக்கு மிக மேல் மாடியிலிருக்கும் அழகிய படுக்கையைத் தந்தாக வேண்டும்’’ என்றவனாக பேராசையோடு அந்த மாளிகையினுள் நுழைகிறான். பார்வையை உயர் இடங்களை நோக்கி உலாவவிடுகிறான். ஆனால், வீட்டின் எஜமான் அவனை அழைத்துச் சென்று கீழ்மாடியில் அமர வைத்தார். இதற்குக் கூட நன்றி செலுத்துவது அவசியமாக இருக்கின்ற போது, அவனோ நன்றிக்குப் பதிலாக மனதால் தூற்றுகிறான். நன்றி ஒருபக்கமிருக்க வீட்டுரிமையாளரை உள்ளூற முறைப்பட்டுக் கொள்கிறான். உரிமையாளரும் அவனோடு ஒவ்வாமனதோடு நடந்து கொள்கின்றார். முதலாமவனோ மிகுந்த பணிவோடு மாளிகையினுள் நுழைகிறான். மிகவும் கீழ் மாடியிலிருக்கும் சாய்மானத்தை ஓய்வெடுத்துக் கொள்வதற்காகக் கேட்கிறான். அவனுடைய அந்த உயர்ந்த மனத் திருப்தியுடன் கூடிய நடவடிக்கை மாளிகையின் எஜமானனை மிகவும் கவர்கின்றது. ‘‘மேல் மாடியிலிருக்கும் படுக்கையில் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்’’ என்று அழைத்துச் செல்கின்றார், போகப் போக அவனது நன்றியுணர்வும் அதிகரித்ததால், அவன் மீதுள்ள அந்த எஜமானரின் நேசமும் அதிகரித்தது.

ஆம்! இந்த உலகமானது அர்ரஹ்மானுடைய ஒரு மாளிகையாகும். பூமிப் பரப்பானது ஓர் அருள்பாலிக்கப்பட்ட உணவு விரிப்பாகும். ஆகாரங்களினதும் வாழ்வாதாரங்களினதும் படித்தரமானது ஒவ்வொரு மாடியையும் போன்றதாகும். ஆகையால், இந்த மாளிகையில் நிகழும் சிறியதொரு நிகழ்விலும் கூட அனைவரும் பேராசையின் எதிர் விளைவுகளை உணர்ந்து கொள்ள முடியும்.

உதாரணமாக, இரண்டு யாசகர்களுக்கு மத்தியில் பேராசையோடு வற்புறுத்திக் கேட்கும் யாசகனைப் புறந்தள்ளி விட்டு ஓர் ஓரமாக இருந்து அமைதியாக யாசிக்கும் யாசகன் மீது இரக்கப்பட்டு அவனுக்கு உதவி செய்ய அனைவரும் உள்ளத்தால் முன்வருவர். அதேபோல், நள்ளிரவில் உனது தூக்கம் கலைந்து விட்டது எனில், மீண்டும் தூங்க நாடினால், பொருட்படுத்தாது இருந்து விடு! தூக்கம் உடனே வந்து விடும். மாறாக, தூக்கம் உடனே வந்துவிட வேண்டுமே என்று நொடிக்கொரு முறை பேராசைப் பட்டால் இருக்கின்ற தூக்கமும் கலைந்து விடும். மேலும், முக்கியமானதொரு விடயத்திற்காக ஒருவர் வரும்வரை பதற்றத்தோடு காத்துக் கொண்டிருக்கின்றீர். ‘‘இன்னும் வரவில்லையே’’, ‘‘இன்னும் வரவில்லையே’’ என்று உனது அவசரப்புத்தி காரணமாக, பேராசைக் குணம் உனது பொறுமையை வெற்றி கொண்டு இறுதிக் கணத்தில் அவ்விடம் விட்டகல்வாய். ஒரு நிமிடத்துக்குப் பிறகு அந்த மனிதன் அவ்விடம் வருவார். ஆனால், நடக்க வேண்டிய அந்த முக்கிய விடயம் நிறைவேறாது போய்விடும்.

இவ்வாறான நிகழ்வுகளுக்குப் பின்னால் உள்ள இரகசியமானது, ஒரு ரொட்டியின் உற்பத்தியானது எவ்வாறு வயல், விளைச்சல், ஆலை, அடுப்பு என்பவற்றோடு தொடர்பு பட்டுள்ளதோ, அதே போன்று தான் பொருட்களின் ஒழுங்கமைப்பில் ஒரு ஞானம் பொருந்திய படிமுறை வளர்ச்சி காணப்படுகின்றது. பேராசை காரணமாக இந்தப் படிமுறை வளர்ச்சிக்குட்படாது செயற்படுவதால் ஒழுங்குபடுத்தப்பட்ட அந்தப் பொருட்களுக்குள் பொதிந்திருக்கும் உணர முடியாத உள்ளார்ந்த படிக்கட்டுக்கள் புறக்கணிக்கப்படுகின்றன. இதனால் ஒன்றில் இடறிக் கீழே வீழ்ந்து விடுவர் அல்லது படிமுறைகள் பூரணப் படுத்தப்படாமையால் இலக்குப் பிழைக்கும்.

வாழ்வாதாரம் தேடும் வேட்டையில் தன்னிலை மறந்து, உலக மோகத்தால் போதைக்குட்பட்டிருக்கும் சகோதரர்களே! பேராசை இப்படிப்பட்ட இழப்புக்களும் தரித்திரமும் நிறைந்த ஒன்றாக இருக்கின்ற போது, இந்தப் பாதையில் கண்ணியம் இழந்து, ஹராம் ஹலால் பாராது அனைத்துவித இழிவுகளையும் பொருந்திக் கொண்டு, மறுமைக்குத் தேவையான ஏராளமான விடயங்களை எந்த நம்பிக்கையில் தியாகம் நீங்கள் செய்கின்றீர்கள்? அதற்கும் மேலால் இஸ்லாத்தின் ஐம்பெரும் தூண்களுள் ஒன்றான ஸக்காத்தை இந்தப் பேராசைக்கடிமைப்பட்டு எவ்வாறு தான் விட்டு விடுகின்றீர்கள்? உண்மை என்னவென்றால், ஸக்காத்தானது இரு தரப்பாருக்கும் பரக்கத்துக்கான காரணியாகவும், முஸீபத்துக்களுக்கான தடுப்பாகவும் இருக்கின்றது. அனைத்து நிலைமைகளிலும் ஸக்காத்தைக் கொடுக்காதவனிடமிருந்து ஸக்காத்தின் பெறுமதியளவு பொருள் வெளியேறிவிடும். ஒன்றில் அவசியமற்ற இடங்களில் செலவழிக்கப்படும் அல்லது ஒரு முஸீபத் வந்து அழித்து விடும்.

முதலாம் உலகப் போரின் ஐந்தாம் வருடத்தில், ஆச்சரியப்படத்தக்க உண்மையான மெய்ந்நிலைக் கனவு ஒன்றில் என்னிடம் பின்வரும் வினா முன்வைக்கப்பட்டது:

“முஸ்லிம்களைத் தொற்றியிருக்கும் பசி, வறுமை மற்றும் வேதனைகளுக்கான காரணம் என்ன?”

**கனவில் பின்வருமாறு பதிலளித்திருந்தேன்:** வல்லோன் அல்லாஹ் சில வகைப் பொருட்களிலிருந்து பத்தில் ஒன்றை[1], இன்னும் சில பொருட்களில் இருந்து நாற்பதில் ஒன்றை[2] தான் அருளிய பொருட்களிலிருந்து எம்மிடம் கேட்டான்; ஏழைகளின் துஆக்கள் எம்மை வந்தடைந்து அவர்களது வெறுப்பும், பொறாமையும் எம்மை விட்டும் அகன்று விடட்டும் என்பதற்காக. நாமோ பேராசை காரணமாக கஞ்சத்தனம் காட்டி அதைக் கொடுக்கவில்லை. மகா ஞானம் கொண்ட இரட்சகன், இறுதியில் சேமிக்கப்பட்ட ஸக்காத்தான முன்னைய வருடங்களின் ஸக்காத்தையும் சேர்த்து நாற்பதில் முப்பதையும், பத்தில் எட்டையும் ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டான். மேலும், ஒவ்வொரு வருடமும் வெறுமனே ஒரு மாதம் எழுபது தாத்பரியங்கள் பொதிந்ததொரு பட்டினிக் கிடப்பை எம்மிடம் எதிர்பார்த்தான். நாமோ நஃப்ஸுக்கு இரங்கல் காட்டி தற்காலிகமான ஆனால், இன்பமயமான அந்தப் பட்டினி கிடப்பைப் புறந்தள்ளி விட்டோம். அந்த ஞானமிக்க வல்லோன் பாவப்பரிகாரமாக எழுபது கோணங்களில் தொந்தரவு நிறைந்த ஒரு வகை நோன்பை ஐந்து வருடங்கள் வலுக்கட்டாயமாக எம்மீது சுமத்தினான். மேலும், இருபத்தி நான்கு மணித்தியாலத்தில் ஒரே ஒரு மணித்தியாலத்தை இன்பமும் மேன்மையும் பிரயோசனமுமிக்க ஒளிமயமான ஒரு வணக்கத்துக்காக எம்மிடம் எதிர்பார்த்தான். நாம் சோம்பேறித்தனத்துக்குட்பட்டு அந்தத் தொழுகையை நிலைநாட்டத் தவறி விட்டோம்; அந்த

---

[1] : *அதாவது ஒவ்வொரு வருடமும் புதிதாக வழங்கிய கோதுமைபோன்ற பண்டங்களிலிருந்து பத்தில் ஒன்று*

[2] : *அதாவது அல்லாஹ் ஏற்கெனவே வழங்கிய நாற்பதுடன் சேர்த்து, ஒவ்வொரு வருடத்திலும் முதலீட்டு இலாபத்தின் அடிப்படையிலும் கால்நடைகளின் இனப்பெருக்கத்தின் அடிப்படையிலும் பெரும்பாலும், குறைந்தபட்சம் நாற்பதுக்குப் பத்தை மேலதிகமாக வழங்குகின்றான்.*

ஒரு மணி நேரத்தையும் மிகுதி நேரங்களோடு சேர்த்துத் தொலைத்து விட்டோம். சர்வ வல்லமை மிக்க இரட்சகன் அதற்கான பிரதியீடாக ஐந்து வருடங்கள் கடுமையான பயிற்சி மற்றும் கட்டளைகளினூடாக எம்மை ஒரு வகை வணக்கத்தில் ஈடுபடுத்தினான்.''

பிறகு விழித்துக் கொண்டு சிந்திக்க ஆரம்பித்தேன். அந்தக் கனவில் மிகவும் ஆழமானதொரு உண்மை பொதிந்துள்ளது என்பதை விளங்கிக் கொண்டேன். ரிஸாலே-இ நூர் தொகுப்பின் இருபத்தி ஐந்தாம் வார்த்தையில் நவநாகரிகத்திற்கும் குர்ஆனிய சட்டங்களுக்குமிடையிலான மதிப்பீட்டில் தெளிவுபடுத்தப்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதற்கமைய, மனிதனின் சமூக வாழ்வில் கோலோச்சியிருக்கும் அனைத்து விதமான பண்பாட்டு வீழ்ச்சிகளினதும், கலகங்களினதும் ஊற்றுக்கண் பின்வரும் இரண்டு வார்த்தைகளாகும்:

**ஒன்று:** எனது வயிறு நிரம்பிய பிறகு மாற்றான் பட்டினியால் செத்தால் தான் எனக்கென்ன?

**இரண்டாவது:** நீ உழைத்துப் போடு, நான் சாப்பிடுகிறேன்.

இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் உயிரூட்டி வாழ்வளிப்பது, வட்டிப் பொறிமுறையும் ஸக்காத்தின் புறக்கணிப்புமாகும். ஆக, இந்த இரு பெரும் சமூக நோய்களுக்கும் நிவாரணமளிப்பதற்கான ஒரே வழி, ஸக்காத்தை ஒரு பொதுச் சட்டமாக அமுலுக்கு கொண்டு வந்து கட்டாயமாக்குவதும், வட்டியைத் தடை செய்வதுமாகும். மேலும், தனியாகத் தனிமனிதர்களுக்கிடையில் அல்லது குறித்த குழுக்களுக்கிடையில் அல்ல, ஒட்டுமொத்த மனித குலத்தினதும் நிம்மதியான வாழ்க்கைக்கும், மனித வாழ்க்கையின் தொடர்ச்சிக்குமான மிகவும் முக்கியமானதொரு தூண் ஸக்காத்தாகும். ஏனெனில், மனிதர்களில் சாதாரண வகுப்பினர், உயர் வகுப்பினர் என இரண்டு வகுப்புக்கள் காணப்படுகின்றன. மேல் வகுப்பிலிருந்து சாதாரண வகுப்பிற்கு வர வேண்டிய கருணை மற்றும் ஆதரவு என்பவற்றையும் சாதாரண வகுப்பிலிருந்து மேல் வகுப்பிற்கு வர வேண்டிய பணிவு மற்றும் கட்டுப்பாடு என்பவற்றையும் உறுதிப்படுத்தி நிலை நாட்டுவது ஸக்காத்தாகும். இல்லையேல் மேலிருந்து அப்பாவி மக்கள் மீது கொடுங்கோன்மையும், அழுத்தமும் கோலோச்சும். சாதாரண வகுப்புக்கு மத்தியில் செல்வந்தர்களுக்கெதிராக வெறுப்பும், கலகமும் மேலோங்கும். இரண்டு வகுப்புகளுக்கும் மத்தியில் தொடர்ந்தேர்ச்சையான ஒரு பனிப்போரும், தீர்க்க முடியாத கருத்து மோதலும் நீடிக்கும். இந்நிலை இறுதியில் ரஷ்யாவில் ஏற்பட்டது போன்றதொரு தொழிலாளர்-முதலாளிப் போராட்டமாக வெடிக்கும்.

**மனச்சாட்சியுடைய கொடை வள்ளல்களே! கருணையுள்ளம் கொண்ட தாராள மனம் படைத்தவர்களே..!**

உங்களது கொடைகள், ஸக்காத்தாக அன்றி வேறு விதங்களில் இருக்குமானால் மூன்று பாதிப்புக்கள் இருக்கின்றன. சிலவேளை பிரயோசனமற்றதாகவும் மாறி விடும். ஏனெனில், நீங்கள் அல்லாஹ்வின் பெயரால் வழங்காத காரணத்தினால், வழங்கப்பட்டவரை ஒருவகை உள்ளார்ந்த நன்றிக்கடனுக்கு உள்ளாக்குகின்றீர்கள். ஏற்கனெவே வக்கற்றவனாக இருக்கும் அந்த ஏழையை ஒரு வகை அடிமைத்தளைக்கு ஆளாக்குகின்றீர்கள். அத்தோடு, அவர்களது ஏற்றுக்கொள்ளப்பட அருகதையுள்ள தூய துஆவின் பாக்கியத்தையும் இழந்து விடுகின்றீர்கள். மேலும், யதார்த்தத்தில் அல்லாஹ்வுடைய முல்க்கை அவனது அடிமைக்குக் கொண்டு சேர்க்கும் ஒரு சேவகனாக இருக்கின்ற நீங்கள், தன்னை அந்தப் பொருளின் உண்மை உரித்தாளனாகக் காட்டிக் கொள்வதால் அருளப்பட்ட அருட்கொடைகளுக்கு முன்னால் நன்றி கெட்டவனாக ஆகி விடுகின்றீர்கள். ஸக்காத்தாகக் கொடுப்பீர்களேயானால் அல்லாஹ்வின் பெயரால் கொடுத்த காரணத்தினால் அதற்கான நன்மையைப் பெற்றுக் கொள்வீர்கள்; அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தியவர்களாக ஆகிவிடுவீர்கள். அந்தத் தேவையுள்ள மனிதன் உங்களுக்கு முன்னால் கூழைக்கும்பிடு போட்டுச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தாததன் காரணமாக அவரது சுய கௌரவம் பாதிக்கப்படாது. ஆக, உங்கள் விடயத்தில் அவரது துஆ தூய்மையானது என்பதால், அது ஏற்றுக்கொள்ளப் படுவதற்கான தகுதியைப் பெறும். ஆம், ஸக்காத்தின் அளவு அல்லது அதை விட

அதிகமான சுன்னத்தான அல்லது வேறுவிதமான கொடைகளை வழங்கி ஒரு புறம் முகஸ்துதி, போலி அந்தஸ்து மறுபுறம் நன்றிக் கடன், இழிவுபடுத்தல் போன்ற அழிவுகளை ஏற்படுத்திக் கொள்வது சிறந்ததா? அல்லது ஸக்காத் மூலமாக அந்த நற்செயல்களைச் செய்து ஃபர்ளை நிறைவேற்றுவதோடு ஏராளமான நன்மைகளையும், உளத் தூய்மையையும், ஏற்றுக் கொள்ளப்பட்ட துஆவையும் பெற்றுக் கொள்வது சிறந்ததா?

سُبْحَانَكَ لاَعِلْمَ لَنَا اِلاَّ مَاعَلَّمْتَنَا اِنَّكَ اَنْتَ الْعَلِيمُ الْحَكِيمُ * اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلٰى سَيِّدِنَا مُحَمَّدٍ الَّذِى قَالَ اَلْمُؤْمِنُ لِلْمُؤْمِنِ كَالْبُنْيَانِ الْمَرْصُوصِ يَشُدُّ بَعْضُهُ بَعْضًا وَقَالَ اَلْقَنَاعَةُ كَنْزٌ لاَ يَفْنٰى وَعَلٰى اٰلِهِ وَصَحْبِهِ اَجْمَعِينَ اٰمِينَ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ

**அல் ஹுஜ்ஜதுஸ் ஸஹ்றாவின் இரண்டாவது அத்தியாயத்திலிருந்து**

ஏழாவது, எட்டாவது ஆதாரங்கள்:

وَالْاٰجَالُ الْمُعَيَّنَةُ وَالْاَرْزَاقُ الْمُقَنَّنَةُ ஆகும்.

அதாவது, ஓர் உன்னதமான ஞானத்தினடிப்படையில், பார்வைக்குத் தெளிவற்றதாகவும், நிச்சயமற்றதாகவும் தோன்றும் ஆயுள் மற்றும் வாழ்வாதாரமானது, திரைக்குப் பின்னால் விதி என்ற ஆதி அந்தங்களின் அனைத்து விடயங்களும் எழுதப்பட்ட கத்ர் ஏட்டின், வாழ்க்கை சம்பந்தமான பக்கத்தில் நிர்ணயிக்கப்பட்டு விட்டது. ஒவ்வோர் உயிரினத்தினது ஆயுளும் ஆழ அகலங்களுடன் நிர்ணயிக்கப்பட்டு விட்டது. அது ஒருபோதும் முன் பின் ஆகாது. அத்தோடு, ஒவ்வோர் உயிரினத்தினதும் ஆகாரங்கள் நிர்ணயிக்கப்பட்டு, பங்கிடப்பட்டு கத்ர் ஏட்டில் எழுதப்பட்டு விட்டன என்பதை நிரூபிப்பதற்கான எண்ணற்ற ஆதாரங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக, ஒரு விருட்சத்தின் இறப்பு, பின்னர் அதன் ஒரு வகை ரூஹான விதை இறந்த விருட்சத்தின் கடமையைத் தொடர்வதற்காக அந்த இடத்தில் விடப்படுவது என்பன, அல்அலீம், அல்ஹஃபீழ் அதாவது, எல்லையற்ற அறிவுடையோனும் பாதுகாவலனும் ஆகிய ஒருவனுடைய ஞானமிக்க வரையறைகளின் அடிப்படையில் நிகழ்ந்தேறுகின்றன என்பதையும், ஒரு கன்றின் ஆகாரமான பால், இரத்தத்துக்கும் சாணத்திற்கும் மத்தியிலிருந்து வெளிப்பட்டு, அணுவளவேனும் கலப்படமின்றிப் பரிசுத்தமானதாகவும், தூய்மையானதாகவும் முலைகளினூடாகக் கன்றுகளின் வாய்களை நோக்கிப் பீறிடுவது, தற்செயல் சாத்தியப்பாட்டை மிகவும் உறுதிபட அர்த்தமற்றதாக்கி அலீம், ரஹீம் ஆகிய ரஸ்ஸாக் உடைய பரிவு மிக்க சட்டதிட்டங்களுக்கமைய அரங்கேறுகின்றது என்பதையும் ஆணித்தரமாக நிரூபிக்கின்றன. இந்த சிறிய இரண்டு உதாரணங்களுக்கிணங்க ஒட்டு மொத்த உயிரினங்களும் ஒப்பிடப்பட முடியும்.

முடிவாக, யதார்த்தத்தில் ஒவ்வொருவரது ஆயுளும் ஆழ அகலங்களோடு நிர்ணயிக்கப்பட்டு விட்டது; ஆகாரமும் கூட ஒவ்வொருவருக்குமாகப் பங்கிடப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட ஏட்டில் பதியப்பட்டு விட்டது. ஆனால், உன்னதமான ஒரு நோக்கத்திற்காக ஆயுளும் ஆகாரமும் மறைவான திரைக்குப் பின்னால், தெளிவற்றதாகவும், நிச்சயமற்றதாகவும், பார்வைக்கு ஏதோ தற்செயல் நிகழ்வு போன்றும் தோற்றமளிக்கின்றன. ஆயுள், சூரிய அஸ்தமனம்

போன்று தெளிவானதாக இருந்திருப்பின், வாழ்வின் முதல் அரைப் பகுதியும் பரிபூரண பொடுபோக்குத்தனத்திலும், மறுமையை மறந்து செலவழிப்பதிலும் பாழாகி, மிகுதி அரைப் பகுதியில் ஒவ்வொரு நாளும் மரண மேடையை நோக்கி ஓர் அடி வைப்பதைப் போன்று பயங்கரமானதொரு விரக்தி மற்றும் அச்சத்தோடு வாழ நிர்ப்பந்திக்கப்பட்டு மரணத்திலுள்ள வேதனை நூறு மடங்காக அதிகரிக்க வழிவகுத்திருக்கும். இதன் காரணமாகத் தான் சந்திக்க இருக்கும் இழப்புக்களும் விசேடமாக உலகத்தின் ஆயுளான மறுமை நாளும் கூட மறை திரைக்குப் பின்னால் மாபெரும் கருணையின் ஒரு வெளிப்பாடாக மறைக்கப்பட்டுள்ளது.

ஆகாரமானது, வாழ்க்கை என்ற அதி உன்னத அருளுக்கு அடுத்தபடியான மிகப் பெரியதொரு அருட் செல்வமாகவும், இறை நன்றிக்கான தூர்ந்து போகாத ஓர் ஊற்றாகவும், இறை வணக்கம், பிரார்த்தனை, இறைஞ்சல் என்பவற்றுக்கான உள்ளடக்கமிக்க ஒரு விளைநிலமாகவும் இருக்கின்ற காரணத்தினால், பார்வைப் புலத்திற்கு தெளிவற்றதாகவும் தற்செயல் நிகழ்வுகளுக்குட்பட்டது போன்றும் காட்டப்பட்டுள்ளது. ஆக, ஒவ்வொரு பொழுதும் கொடையாளனாகிய அல்கரீமுர்ரஸ்ஸாக் உடைய சன்னிதானத்தை நோக்கிக் கூனிக்குறுகி இறைஞ்சியவனாகப் பிரார்த்தித்துத் தூய இறை நன்றியைப் பரிந்துரையாளனாக ஆக்கி, ஆகாரம் வேண்டுவதற்கான வாயில் மூடப்படாதிருக்கட்டும். மாறாக, அது தெளிவானதாக ஆகியிருப்பின், இந்தத் தாத்பரியம் முற்று முழுதாக நேர் எதிராக மாறியிருக்கும்; இறை நன்றி, நன்றிக்கடனுடன் கூடிய இறைஞ்சல்கள், பிரார்த்தனைகள், அடிமைத்துவத்தை நிரூபிக்கும் இறை வணக்கம் என்பவற்றுக்கான வாயில்கள் மூடப்பட்டிருக்கும்.

ഉര

(ஆயதுல் குப்ரா– மாபெரும் அத்தாட்சிகளிலிருந்து)

**நான்காவது சத்தியமான முப்பத்தி மூன்றாவது படித்தரம்**

**ரஹீமிய்யத், ரஸ்ஸாகிய்யத் சம்பந்தமான சத்தியங்களாகும்**: அதாவது சற்று விரிவாகச் சொல்வதானால், தரையிலும் ஆகாயத்திலும், நீரிலும் நிலத்தடியிலும், அனைத்து விதமான உயிரினங்களிற்குமான, குறிப்பாக ஜீவராசிகளுக்கான, விசேடமாக சாதுவான பலவீனமிக்க ஜீவராசிகளுக்கான, அதிலும் விசேடமாக இளம் கன்றுகள், குஞ்சுகள் என்பவற்றுக்கான உடலியல், உளவியல் ரீதியிலான அனைத்து விதமான ஆகாரங்களும் மாபெரும் கருணையோடு காய்ந்து வரண்டு போன சாமான்யமான மண்ணிலிருந்தும், உயிர்ப்பற்ற முள்ளுத்துண்டுகள் போன்ற காய்ந்த கட்டைத் துண்டுகளிலிருந்தும், அதிலும் மிகவும் சிரேஷ்டமான ஆகாரங்களுள் ஒரு வகையானது சாணத்திற்கும் இரத்தத்திற்கும் மத்தியிலிருந்தும் இன்னுமொரு வகையானது ஆயிரக்கணக்கான நிறைகளைக் கொண்டவையாக கடுகளவேயான விதைகளிலிருந்தும் வெளிப்படுத்தப்பட்டு, நேரத்திற்கு நேரம், மிகவும் நுணுக்கமான ஒழுங்கமைப்போடு, எந்தவொன்றையும் மறந்தோ விடுபட்டோ விடாது எமது கண்களுக்கு முன்னால் -மறைவிலிருந்துமுள்ள ஒரு கரத்தால்- வழங்கப்படுகின்ற சத்தியமாகும்.

ஆம்!

إِنَّ اللهَ هُوَ الرَّزَّاقُ ذُو الْقُوَّةِ الْمَتِينُ

என்ற வசனம், போசித்துப் பரிபாலித்தல் அல்லாஹ்வின் புறமிருந்துமுள்ளது என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுகின்ற அதே வேளை,

وَمَا مِنْ دَابَّةٍ فِى الْأَرْضِ اِلاَّ عَلَى اللهِ رِزْقُهَا وَيَعْلَمُ مُسْتَقَرَّهَا وَمُسْتَوْدَعَهَا كُلٌّ فِى كِتَابٍ مُبِينٍ

எனும் வசனம், மனிதர்கள் மற்றும் ஜீவராசிகளின் ஆகாரங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் பொறுப்பிற்கும், உத்தரவாதத்திற்கும் கீழுள்ளது என்ற உண்மையை நோக்கியும்

وَكَأَيِّنْ مِنْ دَابَّةٍ لاَ تَحْمِلُ رِزْقَهَا اَللهُ يَرْزُقُهَا وَإِيَّاكُمْ وَهُوَ السَّمِيعُ الْعَلِيمُ [ix]

என்னும் வசனமானது, உணவைத் தாமாகப் பெற்றுக் கொள்ள முடியாத பலவீனமான, சுயதெரிவாற்றல் அற்ற, சாதுவான, வக்கற்ற ஜீவராசிகளின் உணவுகள் கூட நினையாப் புறத்திலிருந்தும், சிலவேளை மறைவிலிருந்தும், சிலவேளை இல்லாமையிலிருந்தும் – உதாரணமாக கடலின் அடி ஆழத்திலிருக்கும் ஒரு வகைப் பூச்சிகளுக்கு இல்லாமையிலிருந்தும், ஒட்டுமொத்த பாலகர் குலத்துக்கும் நினையா இடத்திலிருந்தும், பூரா ஜீவராசிகளிற்கும் ஒவ்வொரு வசந்த காலத்திலும் ஏறக்குறைய மறைவிலிருந்தும் – நடக்கும் ஆகார விநியோகத்தை நோக்கியும் கவனத்தைத் திருப்புகின்றது. இவற்றை நேரடியாகத் தனது கண்காணிப்புக்குக் கீழ் எமது கண்களுக்கு முன்னால் நடாத்திக் காட்டுவதன் மூலமாக காரணகாரியவாதிகளான சடவாதிகளுக்குக் கூட, இவை மறை திரைக்குப் பின்னாலிருக்கும் அந்த வல்லோனின் செயல்கள் என்பதை நிரூபிக்கின்றது. இதே போன்ற பல குர்ஆன் வசனங்களும் படைப்புலகிலிருக்கும் அத்தாட்சிகளும் ஒருமித்த குரலில் “ஒவ்வொரு தனி உயிரினமும் ஒரே இரட்சகனான அர்ரஸ்ஸாக் உடைய கருணையால் போஷித்துப் பரிபாலிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன” என்று சாட்சி பகர்கின்றன.

ஆம்! ஒரு வகை ஆகாரத் தேவை உடைய மரங்கள் தம்மிடம் சுயதெரிவாற்றலும் சுய பலமும் இல்லாததன் காரணமாக, அவை தத்தமது இடங்களில் அப்படியே பூரண தவக்குலோடு நின்று கொண்டிருக்க, அவற்றுக்கான ஆகாரங்கள் அவற்றை நோக்கி ஓட்டுவிக்கப்படுவது, பலவீனமான கன்றுக் குட்டிகளின் ஆகாரம் ஆச்சரியப்படத்தக்க விதமான ஊற்றுக்களிலிருந்து வாய்களுக்குள் பீறிடுவதாக இருக்க, சற்றுப் பலத்தையும் சுயதெரிவாற்றலையும் பெற்றுக் கொண்ட பின்னர் அந்தப் பால் ஊற்றுக்கள் தடைப்பட்டு விடுவது, மேலும் விசேடமாக குழந்தைகளுக்குத் தாயின் அளப் பெரிய கருணை உதவியாகக் கொடுக்கப்பட்டிருப்பது என்பன, ஹலாலான வாழ்வாதாரம், வலிமை, மற்றும் சுயதெரிவாற்றலின் அளவிற்கிணங்கவன்றி தவக்குலிற்குக் காரணமாக இருக்கும் இயலாமை மற்றும் பலவீனத்தின் அளவிற்கிணங்கவே வருகின்றது என்பதை நிரூபிக்கப் போதுமான ஆதாரங்களாகும்.

பொதுவாக விரக்திக்கான காரணமாக உள்ள பேராசையை மென்மேலும் வீரியமூட்டும் ஆற்றல், புத்திக்கூர்மை, சுயதெரிவுச் சுதந்திரம் என்பவற்றைக் கொண்ட ஒரு பகுதி தலை சிறந்த இலக்கியவாதிகள், அந்த இலக்கியத்தைப் பயன்படுத்தி ஒருவகை யாசக வாழ்க்கை வாழ்கின்ற போது, படிப்பறிவற்ற கடின சுபாவம் கொண்ட சில மனிதர்களிடம் காணப்படும் தவக்குலோடு கூடிய பலவீனமான நிலையோடு அவர்கள் செல்வந்தர்களாக மாறுவது,

كَمْ عَالِمٍ عَالِمٍ أَعْيَتْ مَذَاهِبُهُ وَجَاهِلٍ جَاهِلٍ تَلْقَاهُ مَرْزُوقًا

என்பது முதுமொழியாக மாறியிருப்பது என்பன, “ஹலாலான ஆகாரமானது திறமை மற்றும் சுயதெரிவாற்றல் ஆகியவற்றின் துணையால் பெற்றுக் கொள்ளப்பட முடியாது. மாறாக, உழைப்பை ஏற்றுப் பொருந்திக் கொள்கின்ற, தேவையின் அளவை அறிந்து

[ix] அல்அன்கபூத், 60

அனுதாபப்படுகின்ற ஒரு மகா கருணையாளனின் புறத்திலிருந்து அருளப்படுகின்றது'' என்பதை உறுதிப் படுத்துகின்றது.

**ஆகாரம் இரண்டு வகைப்படும்.**

**முதலாவது:** வாழ்க்கையை ஓட்டுவதற்கு இயல்பாகவே போதுமான உண்மை ஆகாரமாகும். இது இறை உத்தரவாதத்திற்கு உட்பட்டதாகும். இந்த ஆகாரம் எந்த அளவு நுணுக்கமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது எனில், உடம்பில் கொழுப்பாகவும், பிற வடிவங்களிலும் சேமிக்கப்பட்டுள்ள இந்த இயல்பான ஆகாரமானது, குறைந்த பட்சம் இருபது நாட்களுக்கதிகமாக உணவுக்கான தேவையின்றி ஒருவரை வாழவைக்கும்; உயிரை தாங்கிப் பிடிக்கும். அதாவது, இருபது முப்பது நாட்கள் பூர்த்தியடையாது, உடலில் சேமிக்கப்பட்டுள்ள இயல்பான ஆகாரம் முடிவடைய முன்னமே பார்வைக்குப் பட்டினியால் மரணிப்பவர்கள், ஆகாரமின்மை காரணமாக அன்றி, பழக்கதோஷத்தை விடுவதால் ஏற்படும் ஒரு வகை நோயின் காரணமாகவே மரணிக்கின்றனர்.

**இரண்டாவது வகை வாழ்வாதாரம்**: பழக்கதோஷம், பகட்டு வாழ்க்கை, வீண்விரயம், துஷ்பிரயோகம் என்பன காரணமாக வேரூன்றி அத்தியாவசியமானதாக மாறியிருக்கும் செயற்கையாகத் தோற்றுவிக்கப்பட்ட, போலியான வாழ்வாதாரங்களாகும். இந்தப் பகுதியானது இறை உத்தரவாதத்திற்குட்படாததாகும். மாறாக, இறை தயாளத்தன்மைக்குட்பட்டதாகும். சிலவேளை தருவான்; சிலவேளை தடைப்படுத்துவான்.

இந்த இரண்டாவது வகை வாழ்வாதார விடயத்தில், சிரேஷ்டமானவன் யாரெனில், விமோசனத்திற்கும் நிம்மதிக்கும் காரணமான சிக்கனம், மனத் திருப்தி மற்றும் ஹலாலான உழைப்பு என்பவை ஒரு வகை இபாதத் என்பதையும் வாழ்வாதாரத்துக்கான செயல் ரீதியான துஆ என்பதையும் விளங்கி ஆன்ம நன்றியோடும், நன்றிக்கடனோடும் அருளப்படுகின்ற அருட்கொடைகளை ஏற்றுக் கொண்டு மகிழ்ச்சியோடு வாழ்பவனாவான். துரதிஷ்டக்காரன் யாரெனில், தீமைகளுக்கும், இழப்புகளுக்கும், இழிவுகளுக்கும், வேதனைகளுக்கும் காரணியான வீண்விரயம் மற்றும் பேராசையோடு, ஹலாலான உழைப்பையும் விட்டு விட்டு, ஹலால் ஹராம் பாராது அலைந்து திரிந்து, சோம்பேறியாகவும் முறைப்பட்டுக் கொண்டவனாகவும் வாழ்ந்து தனது வாழ்க்கைக்கு அநியாயம் இழைத்துக் கொண்டவனாவான். இவன் தனது வாழ்க்கையை அழித்துக் கொண்ட அநியாயக்காரனாவான்.

எவ்வாறு வயிறு ஓர் ஆகாரத்தை வேண்டி நிற்கின்றதோ, அதே போன்று தான் உள்ளம், அறிவு, ஆன்மா, கண், காது, நாவு போன்ற மனித அவயவங்கள், உணர்வுகள் கூட கருணையாளன் அர்ரஸ்ஸாக் இடமிருந்து தமக்குரிய ஆகாரங்களை வேண்டி நன்றி உணர்வோடு பெற்றுக் கொள்கின்றன. ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறாக அவற்றுக்கென்றே உரிய முறையில், அவற்றைத் திருப்திப்படுத்தி இன்பமூட்டும் ஆகாரங்கள் ரஹ்மானுடைய அருள் கஜானாவிலிருந்து அருளப்படுகின்றன. மேலும், நிகரற்ற அன்புடையோனாகிய அந்த அர்ரஸ்ஸாக், அந்த ஆன்ம அவயவங்களுக்கு மிகவும் விசாலமான ஆகாரங்களை வழங்க நாடியதால் கண், காது, இதயம், கற்பனா சக்தி, அறிவு போன்ற ஒவ்வோர் அவயவத்தையும் கருணையாளனின் கருவூலங்களுக்கான ஒவ்வொரு திறவுகோலாகப் படைத்துள்ளான். உதாரணமாக, கண், பிரபஞ்ச வெளியிலிருக்கும் வனப்பு, அழகு போன்ற பெறுமதி மிக்க பொக்கிஷங்களை அடைந்து கொள்வதற்கான ஒரு திறவுகோலாக இருக்கின்றது. இதே போன்று பிற உறுப்புக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொக்கிஷங்களுக்கான திறவுகோலாக இருக்கின்றது. ஈமான் மூலமாக இந்த அருட்கொடைகளில் இருந்து ஒருவன் பூரண பயனடைவான்.

வீண்விரயக்காரனாகவும், சிக்கனம் அறியாதும் வாழ்ந்து, அராஜகத்தையும் அநீதியையும் அரங்கேற்றும் தூய்மையற்ற, துரதிஷ்டக்காரனான மனிதனே! ஒட்டுமொத்தப் பிரபஞ்சத்தினதும், ஒட்டுமொத்தப் படைப்பினங்களினதும் இயக்கவியல் சட்டமாக இருக்கின்ற சிக்கனம், பரிசுத்தம், நீதி என்பவற்றுக்கு எதிராகச் செயற்படுகின்ற காரணத்தினால் ஒட்டுமொத்தப் படைப்பினங்களுக்கும் எதிராக நீ போர்ப் பிரகடனம் செய்கின்றாய்; அவற்றின் ஆன்ம வெறுப்பையும் சீற்றத்தையும் உடைமையாக்கிக் கொள்கின்றாய். எந்த நம்பிக்கையில் ஒட்டுமொத்தப் படைப்பினங்களையும் உனது அநியாயத்தாலும் அநீதியினாலும் வீண்விரயத்தாலும் அழுக்குகளாலும் சினமூட்டுகின்றாய் என்பது தெரியவில்லையா? ஆம்! அஸ்மாஉல் ஹுஸ்னாவிலுள்ள ஹகீம் என்ற நாமத்தின் உன்னதப் பிரதிபலிப்பாக இருக்கின்ற ஒட்டுமொத்த பிரபஞ்சத்திலுமிருக்கும் மகா ஞானமானது, சிக்கனம் மற்றும் வீண்விரயமின்மை என்ற உறுதியான சட்டத்தின் மீது நிறுவப்பட்டுள்ளது; சிக்கனத்தைப் போதிக்கின்றது.

**(இது உஸ்தாத் பதீஉஸ்ஸமான் ஸஈத் நூர்ஸி அவர்கள் சிக்கனம், மனத்திருப்தி வீண்விரயம் சம்பந்தமாக எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிடப்பட்ட உண்மையாகும்.)**

நீங்கள் ஆரம்ப காலத்தில் கிழக்கு அனடோலியாவில் இருக்கும் நாடோடிக் கோத்திரங்கள் மத்தியில் பயணம் மேற்கொண்ட சமயத்தில், அவர்களை நாகரிகத்தின்பாலும், முன்னேற்றத்தின்பாலும் ஆர்வமூட்டுபவர்களாக இருந்தீர்கள். ஆனால், கடந்த நாற்பது வருடங்களாக நவீன நாகரிகத்தை அநாகரிகம் என்று இகழ்ந்தவர்களாக சமூக வாழ்விலிருந்து ஓரமாகி ஏன் தனிமையைத் தேர்ந்தெடுத்தீர்கள்?

**பதில்:** நவீன மேற்கு நாகரிகம், இறை சட்டங்களைப் புறக்கணித்து விட்டு அவற்றுக்கெதிராகச் செயற்படுவதன் காரணமாக அதன் தீங்குகள் நலவுகளையும், அதனால் ஏற்படும் இழப்புக்கள் இலாபங்களையும் மிகைத்து விட்டன. நாகரிகங்களின் உண்மையான இலக்குகளாக இருக்கின்ற அனைத்து மனிதர்களுக்குமான நிம்மதி மற்றும் உலக வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பன சீர்குலைந்து விட்டன. சிக்கனம், மனநிறைவு என்பவற்றின் இடத்தை வீண்விரயம், அற்ப இன்பங்கள் என்பனவும், உழைப்பு, சேவை என்பவற்றின் இடத்தை சோம்பேறித்தனம் மற்றும் சொகுசு வாழ்க்கைக்கான ஆர்வம் என்பனவும் பிடித்துக் கொண்ட காரணத்தினால் நாதியற்ற மனித குலத்தை சோம்பேறிகளாகவும், வறியவர்களாகவும் ஆக்கி விட்டது. இறை வேதமான குர்ஆனுடைய அடிப்படைச் சட்டமான

لَيْسَ لِلْاِنْسَانِ إِلاَّ مَا سَعٰى [x] * كُلُوا وَاشْرَبُوا وَلاَ تُسْرِفُوا

என்ற வசனங்களின் அடிப்படையில், “மனித வாழ்வின் நிம்மதியானது சிக்கனம் மற்றும் உழைப்புக்கான ஈடுபாடு என்பவற்றில் தங்கியிருப்பதோடு, மனிதர்களின் சாதாரண மற்றும் உயர் வகுப்பினருக்கிடையிலான சுமுக உறவும் அதன் மூலமே சாத்தியப்படும்” என்ற

[x] அந்நஜ்ம், 53

உண்மையை ரிஸாலே-இ நூர் பல்வேறு இடங்களில் நிரூபிக்கின்றது. அதனடிப்படையில் இவ்விடத்தில் சுருக்கமான இரண்டு விடயங்களைக் குறிப்பிடுகிறேன்.

**முதலாவது:** நாடோடி வாழ்க்கையில் மனிதன் மூன்று, நான்கு பண்டங்கள் மீது தேவை உடையவனாக இருந்தான். அந்த மூன்று நான்கு தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலையில் பத்துப் பேரில் இருவரே காணப்பட்டனர். தற்போதைய அநியாயக்கார நவீன மேற்கு நாகரிகம் துஷ்பிரயோகம், வீண்விரயம், இச்சைகளைத் தூண்டும் பொழுதுபோக்குகள், அநாவசியமான தேவைகள் என்பவற்றைக் கட்டாயமான நிலைக்குக் கொண்டு வந்து பகட்டாகவும் பழக்கதோஷமாகவும் மாற்றிவிட்ட காரணத்தினால் நவநாகரிக மனிதன், வாழ்க்கையை ஓட்டுவதற்காகத் தேவையான நான்கு பண்டங்களுக்குப் பதிலாக இருபது பண்டங்கள் மீது தேவையுடையவனாக மாறியிருக்கின்றான். அந்த இருபது பொருட்களையும் முழுவதுமாக ஹலாலான முறையில் அடைந்து கொள்பவர்கள் அதிகபட்சம் இருபதில் இருவராகும். மிகுதிப் பதினெட்டுப் பேரும் பராமரிப்புத் தேவை உடையவர்களாக மாறி விடுவர். அதாவது, இந்த நவீன நாகரிகம் மனிதர்களை அதிக வறுமை நிலைக்குள் தள்ளி விடுகின்றது. அந்த அநாவசியத் தேவைகள், மனிதர்களை அக்கிரமத்தை நோக்கியும், ஹராமான சம்பாத்தியத்தை நோக்கியும் உந்தித்தள்ளி விட்டது; நாதியற்ற சாதாரண வகுப்புக்கும், மேல் வகுப்புக்குமிடையிலான மோதலுக்குக் களமமைத்துக் கொடுத்தது; குர்ஆன், தான் முன்வைக்கும் ''ஸக்காத் கடமை - வட்டி ஹராம்'' என்ற அடிப்படைத் தீர்வுச் சட்டம் மூலமாக தோற்றுவிக்க முனையும் சாதாரண வகுப்பினரின் மேல் வகுப்பினருக்குக் கட்டுப்படும் தன்மையையும், மேல் வகுப்பினரின் சாதாரண வகுப்பினர் மீதான கருணையையும் புறந்தள்ளச் செய்துவிட்டு ஆதிக்க வர்க்கத்திற்கு அக்கிரமத்திற்கான வாயிலையும் வறியவர்களுக்கு கலகத்திற்கான வாயிலையும் திறந்து கொடுத்து மனித குலத்தின் அமைதியைக் கெடுத்து விட்டது.

**இரண்டாவது விடயம்:** இந்த நவீன நாகரிகத்தின் ஆச்சரியங்களானது, இரட்சகனால் மனிதனுக்கு வழங்கப்பட்ட ஒவ்வோர் அருளாக இருக்கின்ற காரணத்தினால், ஆழ்ந்ததொரு நன்றியையும் அந்த நன்றியின் அடையாளமாக மனித நலனுக்காகப் பயன்படுத்தப் படுவதையும் வேண்டி நிற்கின்றபோது, தற்போது நாம் காண்கின்ற விடயம் என்னவென்றால், பெரும்பகுதி மனிதர்களுக்கு சோம்பேறித்தனத்துக்கும் ஒழுக்கக் கேட்டுக்கும், உழைப்பை விட்டுவிட்டு சொகுசு வாழ்க்கைக்குள் அற்ப இச்சைகளைத் தீர்த்துக் கொள்வதற்குமான உந்துதலை வழங்கி, உழைப்பதற்கான ஆர்வத்தை இல்லாதொழிக்கின்றது. மேலும் மனத்திருப்தியின்மை, சிக்கனமின்மை காரணமாக ஒழுக்க வீழ்ச்சி, வீண்விரயம், அக்கிரமம் மற்றும் ஹராத்தை நோக்கி மனிதர்களை அழைத்துச் செல்கின்றது.

உதாரணமாக, ரிஸாலே-இ நூரிலுள்ள ''ஒளி உலகின் திறவுகோல்'' இல் குறிப்பிடப்பட்டதைப் போன்று ரேடியோ மிகப் பெரியதொரு அருளாக இருப்பதால், மனித நலனுக்காக பயன்படுத்தப் படுவதனூடாக ஒரு ஆத்ம நன்றி செலுத்தப்பட வேண்டிய கட்டாயம் இருக்கின்ற போது, அதன் ஐந்தில் நான்கு பகுதி இச்சைகளுக்காகவும், வீண் பொழுது போக்குகளுக்காகவும் ஒலிபரப்பப்படுவதானது, சோம்பேறித்தனத்திற்கும், இச்சைகளைத் தூண்டுவதற்கும் மனிதனை உந்தித்தள்ளி, உழைப்பதற்கான ஆர்வத்தை அழிக்கின்றது. அதன் உண்மையான நோக்கத்திற்காக அது பிரயோகிக்கப் படுவதில்லை. அத்தோடு, அதிக பிரயோசனம் நிறைந்த சில ஆச்சரியமிக்க சாதனங்களானது உழைப்பு, மனித நலன்கள் மற்றும் உண்மையான மானுடத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய தேவை இருக்கின்ற போது, நான் கண்டுகொண்டது என்னவென்றால், பத்தில் ஒன்று அல்லது இரண்டு அடிப்படைத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப் பட்டாலும் பத்தில் எட்டு இச்சைகளுக்கும், வீண் பொழுது போக்குகளுக்கும், சோம்பேறித் தனத்திற்கும் மனிதனைக் கட்டாயப் படுத்துகின்றது. இந்த இரண்டு சிறிய உதாரணங்களோடு ஆயிரக் கணக்கான உதாரணங்களை அடுக்கிக் கொண்டு செல்லலாம்.

**சுருக்கமாக:** நவீன மேற்கு நாகரிகம் இறை வேதங்களை முற்றாகப் புறக்கணித்ததன் விளைவாக, மனிதனை முழுமையாகவே வறுமைக்குள் தள்ளி அவனது தேவைகளைப் பன்மடங்காக்கி விட்டது. சிக்கனம் மற்றும் மன நிறைவு என்ற அடிப்படைகளை அகற்றி, வீண்விரயம், அளவுக்கு மிஞ்சிய நுகர்வு, அக்கிரமம் மற்றும் முறைகேடு என்பவற்றுக்கான பாதையைத் திறந்து விட்டது. மேலும், மனிதர்களுக்கு மத்தியில் இச்சைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான ஆர்வத்தை ஊட்டி அந்த நாதியற்ற அப்பாவியான தேவைகள் நிறைந்த மனிதனை சோம்பேறித்தனத்திற்குள் தள்ளி விட்டது. உழைப்பு மற்றும் கருமமாற்றுவதற்கான ஆர்வத்தை இல்லாதொழிக்கின்றது. இச்சைகளுக்கும் ஒழுக்கக் கேட்டுக்கும் அடிபணியச் செய்து வாழ்க்கையை அர்த்தமற்றதாக்கி, பாழாக்கி விடுகின்றது. அனைத்திற்கும் மேலாக ஏற்கெனவே தேவைகள் அதிகரித்து, சோம்பேறியாக்கப்பட்ட மனிதனை நோயாளியாக்குகின்றது. துஷ்பிரயோகம் மற்றும் வீண்விரயத்தினூடாகப் பலநூறு வகை வியாதிகளின் தோற்றத்திற்கும் பரவலுக்கும் காரணியாக அமைந்துள்ளது.